இனிது ரகசியம் அல்ல!

இந்த ஜனாதிபதித் தேர்தலின் பிரசாரக்கூட்டங்களில்புதியவிடயம் ஒன்று தலைகாட்டத் தொடங்கி யிருக்கின்றது.

அதுதான் - கோரஸாக ஒன்று சேர்ந்து கூச்சலிடுவதும் ஊளை யிடுவதும்.

சில தரப்புகளி பக்கம் 02 »

பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஐப்பசி 04 திங்கட்கிழமை 21.10.2019 | கதிர் 350

# ஐ.தே.கவுக்கு ஆதரவு வழங்கியமையால் தமிழ்த் தலைவர்கள் சாதித்தவை என்ன?

## கேள்வி எழுப்புகிறார் ரெஜினோல்ட் குரே

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 21

தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைப் பல வழிகளிலும் முன்னெடுத்து இன ரீதியான பிரச்சினை களைத் தோற்றுவித்ததும் ஆயுதப் போராட்டம் ஆரம்ப மாவதற்குக் காரணமாக இருந்ததும் ஐக்கிய தேசியக் கட்சி தான். அந்தக் கட்சிக்கு ஆதரவை வெளிப்படுத்தி வரும் தமிழ்த் தலைமைகள் சாதித்தவை என்ன?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே. பக்கம் 03»



## கூட்டமைப்பின் நிபந்தனைக்கு ஒருபோதுமே அடிபணியோம்!

### அடித்து கூறுகிறார் கபீர் ஹாசிம்



கொழும்பு, ஒக். 21

தமிழ்த் தேசியக் கூட டமைப்பின்நிபந்தனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அடி பணியப் போவதில்லை என அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித் பக்கம் 03»

## கோட்டாபயவுக்கு ஆதரவாக வெளிநாடுகளிலும் பிரசாரம்!



கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பக்கம் 02»

## 5அம்சக் கோரிக்கைகளை ஏற்காவிடின் தேர்தலைப் புறக்கணிக்கவும் வாய்ப்பு!

### முன்னரே எச்சரிக்கிறது தமிழ் மக்கள் கூட்டணி

யாழ்ப்பாணம், ஒக். 21

ஜனாதிபதித் தேர்தலை முன் னிட்டுதமிழ்க்கட்சிகள்முன்வைத் துள்ள5அம்சக்கோரிக்கைகளை எந்தவொரு வேட்பாளரும்ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கவேண் டிய நிலைமைகூட ஏற்படலாம் என்று தமிழ் மக்கள் கூட்டணி யின் கொள்கைப் பரப்புச் செயலா ளர் க.அருந்தவபாலன் தெரிவித் தார். பக்கம் 03»

## ஜனாதிபதித் தேர்தல் செலவினம் பெருமளவு அதிகரிக்கும் சாத்தியம்

கொழும்பு, ஒக். 21

பிளாஸ்டிக் வாக்குப்பெட்டிகளை இறக்குமதி செய்வதற்கு ஆராய்ந்து வருவதால், ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவினம் மேலும் அதிகரிக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. பக்கம் 03»

## சுதந்திரபுரம் தோட்டக் காணியில் வெளிப்பட்டுள்ள மனித எச்சங்கள்



முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு புதுக்குடியிருப் பில் தோட்டக் காணியில் 2 அல் லது அதற்கு மேற்பட்டோரின் மனித எச்சங்கள் காணப்படுவ தாகப் பொலிஸார் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு சுந்திரபுரம் கொலனியில் பக்கம் 03»

## சஜித் ஆதரவுக் கூட்டங்களில் பங்கேற்பாரா பிரதமர் ரணில்?

### கட்சி முக்கியஸ்தர்களுடன் மந்திராலோசனை

கொழும்பு, ஒக். 21

ஐக்கிய தேசிய முன் னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாஸவுக்கு ஆதரவாக நேற்று முன்தினம் மாத் தளை - லக்கலையில் நடந்த பிரசாரக் கூட்டத் தில் பிரதமர் ரணில் உரையாற்றும்போது, சஜித் ஆதரவாளர்கள் சிலர் பக்கம் 03»

## கோட்டாவை அனைவரும் வெற்றி பெறச் செய்யுங்கள்!

### கோருகிறார் முன்னாள் யாழ். தளபதி ஹத்துருசிங்க



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 21

இலங்கை நாட்டின் மீது அதீத அக் கறையையும் நாடு தொடர்பில் சிறந்த எண்ணங்கள் மற்றும் பக்கம் 03 »

## புலிகளின் சீருடைகள் முல்லைத்தீவில் மீட்பு!



முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவில் தமி ழீழ விடுதலைப் புலிகளின் சீருடைகள்மற்றும்சேட்கள் இரண்டும் மீட்கப்பட்டுள் ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவுஇரணைப் பாலைகுழந்தையேசுஆல யத்துக்கு மதில் கட்டுவதற் காக நேற்று மாலை அத்தி பாரக்கிடங்குவெட்டும்போது அதற் பக்கம் 03»

## பேசத் தயாராயுள்ளோருடன் பேசி நாம் முடிவெடுப்போம்

### சித்தார்த்தன் எம்.பி. கூறுகிறார்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 21

தமிழர்தரப்பிலுள்ள 5 கட்சிகள் இணைந்து தயாரித்துள்ள பொது இணக்கப்பாட்டுக் கோரிக் கையை முன்வைத்து பேசத் தயாராகவுள்ள தரப்புக்களுடன் தொடர்ந்தும் பக்கம் 03»

## ஹைஏஸ் வாகனத்தை மோதித்தள்ளிய டிப்பர்!

### ஒருவர் சாவு! நால்வர் படுகாயம்!!



கிளிநொச்சி, ஒக். 21

ரிப்பர் வாகனம் ஹைஏஸ் வாகனத்துடன் மோதி இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தனர். மேலும் பக்கம் 02»

# தோட்டத் தொழிலாளருக்கு நாள் சம்பளமாக 1500 ரூபா



## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஒக். 21

எனது ஆட்சியின்கீழ் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1, 500 ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். – என்று புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொத்மலைப் பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

மறைந்த தலைவர் காமினி திசாநாயக்காவின் பிறந்த தினத்தில் கொத்மலை நகரில் மக்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

காமினி திசாநாயக்கவின் புதல்வர்களான நவீன் திசாநாயக்க, மயாந்த திசாநாயக்க ஆகியோரின் ஒத்துழைப்புடன் சக்தி மிக்க புதிய நாட்டை உருவாக்குவேன்.

இன்று நாட்டுக்கு தேவை எறும்பை போல் பயணித்து நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க கூடிய தலைவராக செயற்படுவது. எனக்கு வயது 52. நவீன் திசாநாயக்க வயது 50.

நாங்கள் இந்த நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுக்க கூடிய ஆட்டம் இழக்காதவர்களாக இருக்கின்றோம். சிலர் 80 வயதை எட்டியுள்ளனர். அவர்கள் தாமாகவே வீட்டுக்கு செல்ல வேண்டும்.

நாட்டைப் புதிய பாதையில் கொண்டு சென்று அபிவிருத்தியை செய்வதற்கான வயது எம்மிடம் உண்டு. கலாவதியாகியவர்கள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக போட்டி போடுவது அர்த்தம் இல்லை.

பொதுமக்களின் சக்தியினை புதிய ஒரு நாட்டினை உருவாக்குவேன். தேயிலை தொழிலை முன்னெடுக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் மாதாந்தம் 14000 ரூபாவை சம்பளமாக பெறுகின்றனர்.

அப்படியென்றால் நாளொன்றுக்கு 700 ரூபாவை பெறுகின்றனர். ஆனால் 4 பேர் வசிக்கும் ஒரு குடும்பத்தில் 50 தொடக்கம் 55000 ரூபா வரை அவர்களின் வாழ்க்கையை கொண்டு செல்ல தேவைப்படுவதாக புள்ளி விபரம் கூறுகிறது.

இந்த நிலையில் நான் ஆட்சிக்கு வந்தால் உங்களை வழி நடத்தும் திகாம்பரம், இராதாகிருஷ்ணன் ஆகியோரின் சார்பாக நாளொன்றுக்கு 1500 ரூபாவை சம்பளமாக வழங்க உறுதி வழங்குகின்றேன் – என்றார். (ஐ)

# நாட்டைப் பிரித்துவிட்டார்களோ என சந்தேகம் கிளப்புகிறார் சீலாரத்ன தேரர்

கொழும்பு, ஒக். 21

யாழ்ப்பாணம் விமான நிலையத்தை அமைத்துள்ளதன் மூலம் நாட்டை ஏற்கனவே பிரித்து விட்டார்களோ என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனசெத பெரமுனவின் தலைவர் தலைவரான பத்தரமுல்ல சீலாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கவில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஏற்கனவே வடக்கில் விமான நிலையம் ஒன்றை அமைக்கத் தொடங்கி விட்டார்.

இதன் மூலம் இந்தியாவையும் இலங்கையையும் இணைக்க முடியும். அவர்கள் ஏற்கனவே நாட்டைப் பிரித்து விட்டார்களோ என்ற தீவிரமான சந்தேகத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

பல ஆண்டுகளாக கட்டுநாயக்க விமான நிலையம் வழியாக வந்தவர்கள், இனிப் பலாலி விமான நிலையம் வழியாக செல்வார்கள்.

முதலாவது விமானம் கட்டுநாயக்கவில் தரையிறங்கிய பின்னரே, பலாலியில் தரையிறங்க வேண்டும் – என்றார். (ஐ)

# பிரியங்கவின் விலக்குரிமையை பிரிட்டன் மதிக்கவேண்டுமாம்

## இலங்கை அரசு கோருகிறது



கொழும்பு, ஒக். 21

பிரிட்டனின் பொது ஒழுங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும், பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவுக்கு, இராஜதந்திர விலக்குரிமை உள்ளது என்றும், அதனை பிரிட்டன் மதித்து நடக்க வேண்டும் என்றும் இலங்கை கோரியுள்ளது.

2018 பெப்ரவரி 4ஆம் திகதி லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களை நோக்கி, கழுத்தை அறுத்து விடுவது போன்று எச்சரிக்கை செய்திருந்தார் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ.

இந்த விவகாரத்தினால் எழுந்த நெருக்கடிகளை அடுத்து, இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

எனினும், அவருக்கு எதிராக வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றத்தில் மயூரன் சதானந்தன் என்பவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மீள்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இந்த வழக்கு வரும் நவம்பர் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதேவேளை இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், லண்டனில் உள்ள தூதரகத்தில் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ இராஜதந்திரியாகப் பணியில் இருந்தபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பதால், அவருக்கு வியன்னா இராஜதந்திர உறவுகள் குறித்த 1961ஆம் ஆண்டின் பிரகடனங்களின் அடிப்படையில் விலக்குரிமை உள்ளது என்று தெரிவித்துள்ளது.

இந்தக் கடப்பாட்டை பிரிட்டன் அரசு மதிக்க வேண்டும் என்று கோருவதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கென்றே காத்திருக்கும் சில தனியார் தொலைக்காட்சிகள் அவற்றை கனகச்சிதமாகப் பதிவு செய்து மீண்டும் மீண்டும் ஒளிபரப்பி, சேறு பூசும் வேலையை மிகச் சிறப்பாக ஒப்பேற்றுகின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தரப்பினருக்கும் –

சஜித் பிரேமதாஸவின் கூட்டங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் –

எதிராக இந்த கூக்குரலிடும் அட்டகாசம் இடம்பெறுகின்றது.

எல்லாவற்றுக்கும் காரணம் ‘அமைச்சர்’ பதவிகள்தான் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தோர்தான் பிரிந்து சென்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஆரம்பித்து, வளர்த்தனர். சு.கவின் மூத்த உறுப்பினர்கள் பலர் கடைசி வரை சு.கவில் நீடித்தமை மூலம் நல்லாட்சி அரசில் கடைசி வரை அமைச்சர்களாக இருந்தனர். இப்போது அவர்கள் மெல்ல சு.கவை விட்டுக் கழன்று பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படும் நோக்கில் காய் நகர்த்துகின்றனர். சு.கவின் சிரேஷ்டர்கள் இப்படி பொதுஜன பெரமுன தரப்புடன் இணைந்தால், கோட்டா ஜனாதிபதியானதும் அமையக் கூடிய பொதுஜன பெரமுனவின் புதிய அரசில் சு.கவின் இந்த சிரேஷ்டர்களுக்கு அமைச்சர் பதவிகள் – அதுவும் முக்கிய அமைச்சுகள் – வழங்கப்பட வேண்டியது நிலைமை ஏற்படும்.

அப்படி நேர்ந்தால், பொதுஜன பெரமுனவுடன் ஆரம்ப காலம் முதல் இருந்த தாங்கள் ஒதுக்கப்பட நேரலாம் என்ற அந்தரிப்பு பொதுஜன பெரமுனவில் உள்ள சில கனிஷ்ட அரசியல் வாதிகளுக்கு.

புதிய உத்தேச அரசில், அமைச்சுப் பதவிகளுக்கு சு.கவினர் போட்டியாக வருவர் என்ற எரிச்சலினால் அவர்களுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட வகையில் கூக்குரலிடும் கைங்கரியம் அரங்கேறுகின்றது.

இந்த அநாகரிகச் செயலினால் வெறுத்துப்போன சு.கவினர் இனி, பொதுஜன பெரமுனவின் பிரசாரக் கூட்டங்களின் மேடைகளில் தாங்கள் ஏற மாட்டார்கள் என்றும் –

கோட்டாபய ராஜபக்ஷவுக்காகத் தாங்கள் தனித்துப் பிரசாரம் செய்வார்கள் என்றும் – அறிவித்திருக்கின்றார்கள்.

ஐ.தே.கவிலும் கூக்குரலிடுவதும், ஊளையிடுவதும் கூட அமைச்சுப் பதவிக்குத்தான். ஆனால் அது வெறும் அமைச்சர் பதவிக்கு அல்ல. பிரதமர் அமைச்சர் பதவிக்கு.

சஜித் பிரேமதாஸ வரும் தேர்தலில் வென்று ஜனாதிபதியானால் அவரது புதிய அரசில் பிரதமர் பதவி ரணிலுக்கு இல்லை என்பது பெரும்பாலும் தெளிவாகி விட்டதாம். அந்தப் பதவிக்குக் கண் வைத்திருக்கும் தரப்புகளே இந்தக் கூக்குரலிடும் – ஊளையிடும் – அடாவடித்தனத்துக்குப் பொறுப்பு எனத் தெரிகின்றது. ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் முழு ஆசீர்வாதம் மற்றும் தூண்டலுடன்தான் இந்த அராஜகம் அரங்கேறுவதாகத் தெரிகின்றது.

இந்தத் தேர்தலின் இறுதிக் கட்டத்தில் தமது வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக இருக்குமானால், தனது புதிய அரசில் பிரதமர் பதவி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட மாட்டாது என அறிவிப்பதற்கும் சஜித் தயங்கமாட்டார் என்றும் கூறப்படுகின்றது.

அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் கட்சியின் தலைமைப் பதவியைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொண்டு அரசியலில் தாக்குப் பிடிப்பது ரணிலுக்குச் சாத்தியமானதா என்ற கேள்வி எழும்.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஒன்று திரண்டு வாக்களித்து, அவர் வெற்றி, பெற்று ஜனாதிபதியாவாராயின், ரணில் பிரதமராக இல்லாத ஐ.தே.க. அரசில் தமிழருக்கு சாதகமாக ஏதும் கிடைக்குமா என்பதும் கேள்விக்குறிதான்...!

ஒரு குழப்பகரமான நிலையை நோக்கித் தென்னிலங்கை அரசியல் சென்று கொண்டிருக்கின்றது. நவம்பர் 17ஆம் திகதியளவில் குழப்பம் உச்சமாகி, அதன் பின்னர் நிலைமை தெளியும் என நம்புவோமாக!

- மின்னல் -

### கோட்டாபயவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் மத்தியிலும் பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் முதற்கட்டமாக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நேற்றுக் காலை கூட்டமொன்று நடந்தது.

உதய கம்மன்பில எம்பி. , சிரேஷ்ட சட்டத்தரணி அலி பிரி, மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உட்பட்ட முக்கியஸ்தர்கள் அங்கு மக்களுக்கு விளக்கமளித்தனர். (ஐ)

### ஹைஏஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி ஏ–9 வீதியில் 156ஆம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது.

விபத்தில் ஹைஏஸில் பயணித்த 5 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எனினும் அவர்களில் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் வசாவிளானைச் சேர்ந்த கதிர்பிள்ளை இரத்தினம் என்பவரே வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

படுகாயமடைந்தவர்களில் 30 வயது குடும்பப் பெண்ணுடன் அவரது ஒன்றரை வயதுக் குழந்தையும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணித்த ஹைஏஸ் வாகனத்தை எதிர் திசையில் கிளிநொச்சி நோக்கிப் பயணித்த டிப்பர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

டிப்பர் வாகனத்தின் பிரேக் செயலிழந்தமையால் விபத்து இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம்ஒருகொள்கைஅடிப்படையில் செயற்பட்டு வருகின்றோம். வாக்குகளுக்காக எந்தவொரு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறைமை குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்ன தேரர், விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் ஏற்கனவே ராஜபக்ஷாக்களுக்கு ஆதரவளித்து வந்தவர்கள் தான் – என்றார். (ஐ)

## 5 அம்சக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

5 கட்சிகளின் கோரிக்கைகள் குறித்து வேட்பாளர்களின் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும் நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு முயற்சிகள் சாதமாக இல்லாவிட்டால் தமிழ் மக்களின் முடிவுகள் தொடர்பாக மாற்றுத் தெரிவுகள் உள்ளன.

அவைஜனாதிபதித்தேர்தலைப் புறக்கணிக்கலாம், அல்லது தமிழர்சார்பில்நிற்கும்ஒருவருக்கு ஆதரவளிப்பதாக இருக்கலாம், அல்லது தேர்தலில் வாக்களித்து வாக்கைச் செல்லுபடியற்றதாக மாற்றுவதாக இருக்கலாம்.

இவற்றில் மக்கள் எதைச் செய்வார்களென்பது ஜனாதிபதி வேட்பாளர்களின்முடிவுகளிலேயே தங்கியுள்ளது–என்றார். (ஐ–07)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதித் தேர்தலுக்கான மொத்த செலவினங்களை தேர்தல் ஆணைக்குழு இன்னும் இறுதி செய்யவில்லை என்று, தேர்தல் ஆணையாளர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான மொத்தச் செலவினம், சுமார் 400 தொடக்கம் 450 கோடி ரூபா வரை இருக்கும் என்று ஆணைக்குழு ஆரம்ப மதிப்பீடுகளை செய்திருந்தது.

எனினும், தற்போது, தேர்தல் ஆணைக்குழு 700 கோடி ரூபாவை ஒதுக்குமாறு திறைசேரியிடம் கோரியுள்ளது.

35 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் தேர்தலுக்கான செலவு அதிகரிக்கும் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகளுக்குச் செல்ல வேண்டுமா, வேண்டாமா என்று ஆணைக்குழு இன்னும் முடிவு செய்யவில்லை, பிளாஸ்ரிக் வாக்குப் பெட்டிகளுக்குட் செல்ல முடிவு செய்தால், தேர்தலுக்கான செலவு மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கான மொத்த செலவு இன்னும் கணக்கிடப்படவில்லை என்றும் அரச அச்சகதிணைக்களத் தலைவர் கங்கானி லியனகே கூறினார்.

காகிதச் செலவு அதிகரித்துள்ளது. அச்சிடும் நேரம் அதிகரிக்கும். இதன் விளைவாகச் செலவும் அதிகரிக்கும். எனினும், நவம்பர் 6 ஆம் திகதிக்குள் வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணியை முடிக்க திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## ஐ.தே.கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கே.கே.எஸ். வீதியில் சிவலிங்கப்புளியடிச் சந்தியில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெற்றியைப்பெற்றுக்கொடுக்கும் வகையில் வடக்கு மாகாணத்தில் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றோம். அதிலும் சரித்திரத்தில் முதற் தடவையாக தமிழ்க் கட்சிகளும் முன்னர் ஆயுத இயங்கங்களாக இருந்த ஆயுதக் கட்சிகள் பலவும் தமது ஆதரவை கோட்டாவுக்குத் தெரிவித்துள்ளன.

இவ்வாறு நாம் அனைவரும் மக்களிடம்சென்று பிரசாரங்களை முன்னெடுக்கின்றபோது தமிழ்த் தலைமைகள் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் கடும் அதிருப்தியை மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். ஏனெனில் நம்பி வாக்களித்த கூட்டமைப்பு இன்றைக்குத் தமக்காக எதனையும் செய்யவில்லை என்றும் அவர்கள் தமது பதவிகளுக்காகவும் சலுகைகளுக்காகவுமே அரசுடன் இணைந்து செயற்படுகின்றனர் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தேர்தல்தொடர்பில் இன்னமும் தமது முடிவைக் கூட்டமைப்பு அறிவிக்கவில்லை. அவர்கள் தாமும்குழம்பிமக்களையும்குழப்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால்மக்கள்தாம்நம்பிஏமாந்துவிட்டோம் என்ற ஆதங்கத்தில் இருக்கின்றனர்.ஆகவேகூட்டமைப்பும் சரி தமிழ் மக்களும் சரி சிந்தித்து நல்லதொரு முடிவை எடுக்க வேண்டும். அந்த முடிவினூடாக எமது வேட்பாளர் கோட்டாபயவை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

எமது வேட்பாளர் கோட்டாபய தனக்கு ஆதரவை வழங்குமாறு தமிழ் மக்களிடம் கோரியுள்ளார். கோபம், விரோதம் இல்லாமல் இந்தப்பிரதேசங்களைஅபிவிருத்தி செய்ய வேண்டுமென சொல்லியிருக்கின்றார். அத்தோடு தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பல பிரச்சினைகள் தொடர்பிலும் தீர்வை முன்வைப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

ஆகவே சிலரின் பதவிகளுக்காகவும் தமது சுயலாபகங்களுக்காகவும் மக்களை ஏமாற்றுவதை விடுத்து மக்கள் பிரச்சனைகளைத் தீர்க்க எண்ணியிருக்கின்ற எமது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் ஆதரவை வழங்க வேண்டும். அவ்வாறு தமிழ் மக்கள் ஆதரவை வழங்கி எமது வேட்பாளர் வெற்றி பெற்றால் அது தமிழ் மக்களுக்கே நன்மையாக அமையும். அதனை தமிழ் மக்களும் செய்வார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் தமிழ் மக்களின் தலைமைகளாக இருக்கின்ற கூட்டமைப்பினர் மக்களின் நலன்சார்ந்து முடிவுகளை எடுப்பதில்லை. அவர்கள் தமது பதவிகளைத் தக்க வைப்பதற்காகவே முடிவுகளை எடுத்திருக்கின்றனர். ஆகவே எதிர்காலத்திலாவது தமிழ் மக்களின் பிரச்சனைத் தீர்க்க வேண்டுமாக இருந்தால் தற்போது கிடைத்திருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்திலாவது தங்கள் பதவிகளைத் தக்க வைப்பதற்கான முடிவாக அல்லாமல் தமிழ் மக்களின் நலன்சார்ந்த முடிவாக எடுக்க வேண்டும் – என்றார். (ஐ–07)

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிந்தனைகளைக் கொண்டவரும் இந்த நாட்டுக்குப் பொருத்தமான தலைவராகவும் காணப்படும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான கோட்டாபய ராஜபக்ஷவை அனைவரும் வெற்றி பெறச் செய்யவேண்டுமென யாழ் மாவட்ட பாதுகாப்புப் படைகளின் முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தபோதே வடக்கு மக்களின் பிரச்சினைகள், தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றும் வகையில் செயற்பட்ட கோட்டாபயவுக்கு வடக்கு மக்கள் இந்தத் தேர்தலில் தமது ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்தால் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போர் முடிவடைந்த பின்னர் அன்றைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவினால் யாழ். மாவட்டப் பாதுகாப்புப்படைகளின் கட்டளைத் தளபதியாக நான் நியமிக்கப்பட்டிருந்தேன். இங்கு ஐந்து வருடங்கள் நான் கடமையாற்றியிருக்கின்றேன். இங்கு வந்தபோது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றயவேண்டிய தேவை இருந்தது.

இதற்கமைய அரச நிறுவனங்களுடன் இணைந்து அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உதவியுடன் கோட்டாபய ராஜபக்ஷவின் இணைப்புடன் இராணுவத் தளபதியின் ஆலோசனையில் இந்தப் பணிகளை முன்னெடுத்திருந்தேன். இந்த ஐந்து வருட காலப் பகுதியில் 21,550 ஆயிரம் ஹெக்ரேயர் நிலங்களை விடுவித்து ஒரு இலட்சத்து 33 ஆயிரம் மக்களைக் குடியேற்றியிருந்தோம்.

அதே போன்று பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உதவிகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள், வீட்டுத் திட்ட உதவிகள் எனப் பல்வேறு பணிகளை இராணுவம் முன்னெடுத்திருந்தது. இவை அனைத்தையும் பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபயவின் தலைமைத்துவத்திலும் அவரது எண்ணக்கருவிலுமே செய்தோம்.

இவ்வாறான நிலையில் இங்கு இன்னும் குறிப்பிட்டளவு நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டியிருக்கின்றன. கல்வி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டியிருக்கின்றன. ஆகவே நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வெற்றி பெற்று வந்தால் காணிகளை விடுவிக்க முடியுமென்பதுடன் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் ஏற்படுவதுடன் வாழ்வையும் வளப்படுத்திக் கொள்ள முடியுமென்று நினைக்கிறேன்.

ஆகையால் இந்த நாட்டுக்குச் சிறந்த தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யவேண்டியிருக்கின்றது. நிறைய விடயங்கள் தொடர்பில் சிந்தித்துச் செயலாற்றவேண்டியிருக்கின்றது. அதாவது இந்த நாட்டுக்கு என்ன தேவை, என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் சிந்திக்கவேண்டும். அவ்வாறான சிந்தனை கொண்டிருக்கக் கூடிய கோட்டாபய வெற்றி பெற வேண்டும்.

இந்த இடத்தில் முன்னைய ஆட்சிக் காலத்தில் அதாவது மஹிந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளை நினைத்துப் பார்க்கவேண்டும். அந்தப் பணிகளுடன் இணைந்ததாக இன்னும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய தேவையும் இருக்கின்றது. அத்தோடு எமது பிள்ளைகளின் கல்வி, பொருளாதாரம், வாழ்வாதாரம் தொடர்பான முன்னேற்றம் அவசியமானதாகவும் இருக்கிறது.

ஆகையால் இவை தொடர்பில் சிறந்த எண்ணங்களையும் நல்ல சிந்தனைகளையும் கொண்டவரையே தெரிவுசெய்ய வேண்டும். அதற்காக நாங்கள் முன்மொழிந்துள்ள வேட்பாளர் தான் கோட்டாபய. ஆகவே யாழ். மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள் எனக்கும் தெரியும். ஏனெனில் நானும் அவருடன் ஐந்து வருடங்களுக்கு மேலாக இருந்துள்ளேன். ஆகையால் உங்களுக்கு தேவையானதை நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு இதையெல்லாம் செய்யக் கூடிய சிறந்த தலைவரான கோட்டாபய ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்ய வேண்டும். அவர் தான் இந்த நாட்டுக்கு மிகப் பொருத்தமான தலைவராகவும் இருக்கின்றார்–என்றார். (ஐ–07)

## சுதந்திரபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நகுலேஸ்வரன் ராஜேஸ்வரி என்பவரின் தோட்டக் காணியிலேயே மனித எச்சங்கள் புதைக்கப்பட்ட நிலையில் வெளிப்பட்டுள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் காணி தோட்டத் தேவைக்காகப் பதப்படுத்தியபோது எலும்புக் கூடுகள் தென்பட்டன.

இது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதனால் மனித எச்சங்கள் காணப்படும் இடத்தில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் இன்று நீதி – தடயவியல் விசாரணை இடம்பெறும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சஜித் ஆதரவுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊளையிட்டுச் செய்த குழப்பம் தொடர்பில் கட்சிக்குள் பெரும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துக்குத் தனியார் ஊடகங்கள் முக்கிய இடத்தை வழங்கியிருந்தன. மத்திய வங்கி மோசடியில் ஈடுபட்ட ஒருவரும் சஜித்தின் கூட்டத்துக்கு வரக்கூடாதென நேற்று முன்தினம் குழப்பம் விளைவித்தவர்கள் கூறியிருந்தனர்.

முன்னதாக பிரதமர் ரணில் தேர்தல் மேடைகளில் பேசுவதை வரையறுத்திருந்த சஜித் தரப்பு, இப்போது அவரைப் பகிரங்கமாகவே எதிர்க்க முனைந்திருப்பது குறித்து நேற்று முன்தினம் நடந்த சம்பவத்துடன் அதிருப்தியடைந்த ரணில் – நேற்று முன்தினம் இரவே கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரைத் தொலைபேசியில் அழைத்து விசனம் வெளியிட்டுள்ளார்.

நான் தேர்தல் மேடைகளில் பேச வருவதை விரும்பாவிட்டால் பரவாயில்லை . பின்னர் வரும் முடிவுகளுக்கு என்னைக் குறை சொல்லவேண்டாம் என்று ரணில் இதன்போது கூறினார் எனத் தெரிகிறது .

இதேவேளை, நேற்று முன்தினம் இடம்பெற்ற குழப்ப நிகழ்விற்கும் தங்களுக்கும் தொடர்பில்லையென சஜித் தரப்பு பிரதமரிடம் தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிந்தது. (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குள்ளிலிருந்து அவை தென்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், தமிழீழ விடுதலைப் புலிகளின் சீருடைகள் மற்றும் சேட்கள் இரண்டையும் மீட்டுச் சென்றனர். (ஐ)

## பேசத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேசி நாங்கள் ஒரு முடிவுக்கு வரமுடியுமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

5 தமிழ்க் கட்சிகளின் பொது ஆவணம் குறித்து தெற்கில் பல்வேறு சர்ச்சைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தை ஏற்கப் போதில்லை எனக் கூறி வேட்பாளர்கள் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இது குறித்து சித்தார்த்தனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தல் நிலைப்பாடுகள் தொடர்பில் 5 தமிழ்க் கட்சிகள் இணைந்து பொது ஆவணத்தைத் தயாரித்துள்ளன. அந்த ஆவணத்தை ஏற்கப் போதில்லை என்று கூறுகின்றனர். அதே நேரம் பேசுவதற்கும் தயார் என்றும் கூறுகின்றனர். ஆகையால் பேசுவதற்குத் தயாரான தரப்புக்களுடன் பேச்சுக்களை நாம் முன்னெடுப்போம்.

அவ்வாறு பேசுகின்றபோது நாம் தயாரித்துள்ள ஆவணத்தின் பிரகாரம் அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனோர் விவகாரம், காணி விடுவிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வரலாம். ஏனெனில் இந்த விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதியே நடவடிக்கை எடுக்க முடியும்.

அதே நேரம் அரசியல் தீர்வு விவகாரம் தான் பிரச்சினையாக இருக்கிறது. இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை அரசியல் தீர்வு, உடனடியாக வரும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் அதனை ஜனாதிபதி செய்ய முடியாது. அது நாடாளுமன்றத்திலேயே செய்யப்படவேண்டியது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்தப் பிரதான இரு வேட்பாளர்களும் கட்சித் தலைவர்கள் அல்லர். அவர்கள் கட்சித் தலைவர்களாக இருந்தாலாவது கட்சி நிலைப்பாடுகள் தொடர்பில் உத்தரவாதத்தை பெற முடியும். ஆகவே அரசமைப்பு மாற்றம் என்பது இந்த நாடாளுமன்றத்தில் நடக்கப் போவதில்லை. அது அடுத்த நாடாளுமன்றத்திலே நடக்கக்கூடியது.

ஆகையால் அதற்கான கோரிக்கையை நாங்கள் முன்வைக்கலாம். ஆனாலும் நாங்கள் இப்போது செய்யவேண்டுமென்ற கோரிக்கைகளுக்கு இவர்கள் என்ன சொல்லப் போகின்றார்கள் என்பதன் அடிப்படையிலையே எங்களது முடிவுகளும் அமையும்.

எவ்வேட்சிகளின்வேட்பாளர்கள் எப்படியிருந்தாலும் பேசலாம் என்று சொல்பவர்களுடன் பேசுவோம். அதே நேரம் அவர்கள் சார்ந்த கட்சிகளின் தலைவர்களுடனும் பேசுவோம். குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ் பேசத் தயார் என்று கூறியிருக்கின்றார். அதே போல கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பேசத் தயார் என்று கூறியுள்ளார் – என்றார். (ஐ–07)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## புதிய தந்திரோபாயம் அவசியம்

இலங்கையின் தேசிய அரசியலும், அதே நேரம் தமிழர்களின் அரசியலும் புதிய செல்நெறிக்குள் – பாதைக்குள் – பரிமாணத்துக்குள் – நுழைந்து கொண்டிருப்பது கண்கூடு.

அறுபது ஆண்டுகாலம் இலங்கையின் தேசிய அரசியலில் கோலோச்சிய – கடந்த கால் நூற்றாண்டு காலமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைத் தன்வசம் வைத்துக் கொண்டு நாட்டையே ஆட்டிப் படைத்த – ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது செல்வாக்கை இழந்து, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்குப் போய்விட்டது.

இலங்கை அரசியலுக்குள் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளுக்குள் பிறப்பெடுத்த 'ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன' பௌத்த, சிங்களப் பேரினவாதப் பின்புலத்துடன் எழுச்சி பெற்று, புதிய தளத்தில் விஸ்வரூபம் எடுத்து, முன்னணிக்கு வந்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி கூட பெரும் மாற்றத்துக்குள்ளாகி வருகின்றமை கண்கூடு. கடந்த இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு மேல், கட்சி பல பின்னடைவுகளைச் சந்தித்த போதும் அதனைத் தூக்கி நிறுத்தி, சிதைந்து விடாமல் காத்து நின்ற அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சிக்குள் அவமானப்படுத்தப்பட்டு, ஒதுக்கப்படும் அவல நிலைமை வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் பதுளையில் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு திரட்டுவதற்காக நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில், சஜித்துக்கு ஆதரவாகப் பேச வந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கூட்டத்தில் கூக்குரலிடப்பட்டு ஆரவாரம் செய்யப்பட்டது என்றும் –

அதனால் ரணில் விக்கிரமசிங்க பேசமுடியாத இக்கட்டு ஏற்பட்டதாகவும் –கூறப்படுகின்றது.

இப்போது இருப்பது இதுவரை இருந்த ஐ.தே.க. அல்ல என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இந்த நிலைமை தொடர்ந்தால் – அல்லது வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வெற்றியீட்டிப் புதிய ஜனாதிபதியானால் – அதன் பின்னர் செயற்படப் போகின்ற ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் வேறானதாகத்தான் இருக்கும். ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இதுவரை செயற்பட்ட ஐ.தே.கட்சியாக அது நிச்சயம் இருக்காது.

அந்த ஐ.தே.கவின் போக்கு – குறிப்பாக சிறுபான்மை இனங்கள் தொடர்பில் அந்த ஐ.தே.கட்சியின் அணுகுமுறை – முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கும். அந்தப் போக்கில் அல்லது அதனை நெறிப்படுத்தும் பொறுப்பில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு எந்தச் செல்வாக்கும் செலுத்த முடியாத நிலைமையே நேரும்.

முஸ்லிம்களின் அரசியல் கட்சிகளின் நோக்கிலும் போக்கிலும் – சொல்லிலும் செயலிலும் – கூட பெரும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. கடந்த ஏப்ரலில், பெரிய வெள்ளியன்று, இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்திய தொடர் குண்டுத் தாக்குதல்களை அடுத்து, முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்களின் செல்நெறியில் பெரும் மாற்றம் நேர்ந்துள்ளமையை நாம் அறிய – புரிய–கூடியதாகவுள்ளது.

தமிழர் தரப்பிலும் கூட இந்த மாற்றத்தை நாம் காணுகின்றோம்.

இதுவரை தொடர்ந்து நல்லாட்சி அரசை நம்பிக் கெட்டுப்போன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அந்தப் பின்னடைவிலிருந்து தன்னையும் தமிழ் மக்களையும் கைதூக்கி விடுவதற்கான புதிய அணுகுமுறைகளைத் தேடி நிற்கின்றது.

அதன் விளைவே எதிரும் புதிருமாக நின்ற கட்சிகளையும் அரவணைத்து ஒன்று சேர்த்து ஐந்து கட்சிக் கூட்டணியாக பலமாக எழுந்து நிற்கும் எத்தனம்.

வேகமாக மாறிவரும் இந்த அரசியல் களப்புறச் சூழலை தமிழர் தரப்பு நன்கு புரிந்து கொண்டு, தனது அரசியல் அணுகுமுறைப் பாதையைச் செப்பனிட வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றாலும் – அது கோட்டாபயவாக இருக்கலாம் அல்லது சஜித் பிரேமதாஸவாக இருக்கலாம் – யார் வென்றாலும் தமிழர்களைப் பொறுத்தவரை விளைவு மிகுந்த நெருக்கடிகரமானதாகவே இருக்கும்.

நீதி, நியாயத்தின்பாற்பட்டு மக்களை அணுகுகின்றமையை விடுத்து, வாக்கு வங்கிக்காகப் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை முன்னிறுத்தி, வாக்குகளைச் சுருட்டும் தந்திரத்தையேபிரதான இருகட்சிகளினதும்வேட்பாளர்களும் அவர்களது தரப்பினரும் பின்பற்றுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் –

கடந்த ஏழு தசாப்த காலமாக இந்தத் தீவில் பேரவலத்தை மட்டுமே எதிர்கொண்டு நிற்கும் தமிழினத்துக்கு நீதி செய்து, நியாயம் கிட்ட வழிவகுக்கும் எந்த நடவடிக்கையும் ஆட்சிக்கு வரும் சிங்களத் தரப்புகளினால் முன்னெடுக்கப்பட மாட்டா என்பது சர்வ நிச்சயம்.

இந்த யதார்த்தப் புறச் சூழலைப் புரிந்துகொண்டு, மாறிவரும் இந்த அரசியல் களநிலைமைகளுக்குள் தமிழினம் தனது தனித்துவத்தையும், இருப்பையும், உரிமைகளையும் தக்கவைத்துக் கொள்வதற்கான புதிய தந்திரோபாயங்களை – வழிமுறைகளை – வகுத்துக் கொள்வது அவசியம்.

# நாட்டை முன்னேற்றும் பொறுப்பை மக்கள் எங்களுக்கு வழங்கவேண்டும்

## அநுரகுமார திஸநாயக்க கோரிக்கை



கொழும்பு, ஒக். 21

நாட்டை முன்னேற்றும் பொறுப்பை மக்கள் தங்களுக்கு வழங்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க கேட்டுள்ளார்.

மாலபேயில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மத்திய தர வர்க்கத்தை பலப்படுத்துவதுதான் எமது பிரதான நோக்கமாகும். இப்போதுள்ள அரசுக்கு இதற்கான கொள்கைகள் கிடையா.

இன்று நாட்டில் மீனவர்கள்தான் அதிகளவாக துன்பப்படுகிறார்கள். 10 மாதங்கள் கடலில்தான் அவர்கள் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள்.

இதற்கெல்லாம் இலகுவாகத் தீர்வு காண முடியும். செய்மதி உதவியுடன் மீன்கள் இருக்கும் இடத்தைக் காண்பித்தால், மீனவர்களுக்குக் கடலுக்குச் சென்று மீன்களைக் கரைக்குக் கொண்டுவரவேண்டியது மட்டும்தான் உள்ளது.

இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது ஒன்றும் பாரிய விடயமல்ல. இதனால், முதலீடும் பெரியளவில் செல்லாது. இதற்கான கொள்கைகளும் திட்டங்களும் எம்மிடமுள்ளன. எனவே, நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை மக்கள் எமக்கு வழங்க வேண்டும் என்று நாம் இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறோம்–என்றார். (ஐ)

# ஊழலில் ஈடுபடாதோருக்கே என் அரசில் அமைச்சர் பதவி

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

ஊழல் குற்றச்சாட்டுக்கள் அற்றவர்களைத்தான் தனது அரசில் அமைச்சர்களாக நியமிக்கவுள்ளார் என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் கூறுகையில்–

சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் இந்த நாட்டு மக்கள்தான் வசதியாக வாழ்வார்களே ஒழிய அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் அல்லர்.

அமைச்சர்கள்– பிரதியமைச்சர்களுக்கு இருக்கும் அனைத்து வசதிகளையும் நாம் மட்டுப்படுத்துவோம். எமது ஆட்சியில் எமது அமைச்சர்கள் அனைவரும் வீதியில் இறங்கி, மக்களுக்காக சேவையாற்ற வேண்டும்.

இதனைத்தான் நான் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். அமைச்சரவையை நியமிக்கும்போதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் இல்லாத புதியவர்களைத்தான் நியமிப்பேன். இதனால், இலங்கையிலிருந்து முற்றாக வறுமையை இல்லாதொழிப்பேன்.

மக்களின் வரிப்பணத்தால் சுகபோக வாழ்க்கை வாழும் ஜனாதிபதியாக இல்லாது முழுநேர மக்கள் சேவகனாகவே நான் இருப்பேன் என்பதை இவ்வேளையில் நான் உறுதியுடன் மக்களுக்குக் கூறிக்கொள்கிறேன்–என்றார். (ஐ)

# ஏகாதிபத்திய அரசியலை தோற்கடிக்க இணைவோம்

## அமைச்சர் ஹக்கீம் அழைப்பு



கொழும்பு, ஒக். 21

சுயலாப அரசியலுக்காக முஸ்லிம் சமூகத்தையே பலிபீடத்தில் நிறுத்தியுள்ள ஏகாதிபத்திய அரசியலைத் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேட்டுக்கொண்டார்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஏகாதிபத்திய சக்திகள் திட்டமிட்டு அப்பாவிச் சமூகத்தை அரசியலுக்காகப் பலிபீடத்தில் நிறுத்துகின்றனர்.

இவற்றை நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் ஒன்றிணைந்தே எதிர்கொள்ள வேண்டும்.

எனவே ஏகாதிபத்திய அரசியலைத் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்–என்றார். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் வன்முறைகள்; 12 நாள்களில் 1,034 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இதுவரையில் 1,034 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் மாலை 4 மணிவரையான 12 நாள்களுக்குள் இவ்வாறு 1,034 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தேர்தல் சட்டத்திட்டங்களை மீறியதாக 992 முறைப்பாடுகளும் வெவ்வேறு தேர்தல் முரண்பாடுகளின் காரணமாக 34 முறைப்பாடுகளும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 8 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

**நாளை**
22.09.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப 4.06 வரை
திதி : ஷஷ்டி பி.இ. 4.42 வரை
இராகுகாலம் : 9.02 – 10.32
சுப நேரம் : 3.02 – 4.32

# 5 தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் மிக ஆபத்தானவை!

## அலறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஒக். 21

ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்குவதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகள் மிகவும் ஆபத்தானவை எனவும், இது தொடர்பில் பேச்சு நடத்துவதை நினைத்துக் கூட பார்க்க முடியாது என்றும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனவாத, பிரிவினைவாத நிபந்தனைகளை வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களே நிராகரிப்பார்கள். கூட்டமைப்பின் நிபந்தனைகளை நிராகரிக்கும்-நாட்டில் ஒருமைப்பாட்டை-ஏற்கும் வடக்கு அரசியல் கட்சிகள் பல கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்கு முன் நிற்பார்.

ஆபத்து மிக்க யோசனைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னிடம் இதுவரை முன்வைக்கவில்லை. நான் அறிந்த ஊடகங்களில் வெளியாகியிருந்த 13 விடயங்கள் தொடர்பில் மாத்திரமே கருத்து வெளியிட்டேன்-என்றார். (ஐ)

# தேர்தலில் ஹிஸ்புல்லா போட்டி தற்கொலை செய்வதற்கு சமன்!

## கூறுகிறார் பைசல் காசிம்



கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஹிஸ்புல்லா களமிறங்கியிருப்பது தற்கொலைக்கு சமனானதென சுகாதார சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் கிழக்கு மாகாண சபை ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கி இருப்பது அவருடைய பல்கலைக்கழகம் இருக்கின்ற பிரச்சினைகளை ஒரு காலகட்டத்தில் தீர்த்துக் கொள்ள முடியுமென்ற யோசனையாகக் கூட இருக்கலாம்.

இது ஒரு தற்கொலை வேலைத் திட்டம் என்றுதான் நான் கருதுகிறேன். மேலும் கோட்டாபய ராஜபக்ஷவின் தரகராகத் தான் ஹிஸ்புல்லா வேலை செய்கிறார்.

இதேவேளை முஸ்லிம்கள் மட்டுமல்ல சிறுபான்மை மக்களின் நலன் சார்ந்த பல கோரிக்கைகளை கடந்த கால ஆட்சியாளர்களுடன் செய்திருக்கின்றோம். ஆனால் அவற்றில் பலவற்றில் வெற்றி கொண்டிருக்கின்றோம். சில நடைபெறாமல் போயிருக்கின்றன.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுடன் மேற்கொண்ட சந்திப்பின் ஊடாக அவர் கூறும் வார்த்தைகளில் நம்பிக்கை ஏற்பட்டு இருக்கின்றது. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் செயற்படுகின்றோம்.

மேலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம், சாய்ந்தமருது பிரச்சினைகள், காணிப்பிரச்சினை போன்ற விடயங்களை இழுத்தடிப்பு செய்யாமல் குறிப்பிட்ட சில காலங்களுக்கு முடித்து தருவதாக சஜித் உத்தரவாதம் வழங்கியிருக்கிறார்.

ஆனாலும் ஜனாதிபதித் தேர்தல் சிறுபான்மை மக்களுக்கு அவசியமற்றது. நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி ஆட்சிக்கு வருமானால் நாங்கள் தொடர்ந்து முன்னெடுத்து வரும் வேலைத்திட்டங்களை தொடர முடியும். அதற்காகவே நாங்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கு முகங்கொடுக்க வேண்டி இருக்கின்றது-என்றார். (ஐ)

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்;

# தெரிவுக்குழு இறுதி அறிக்கை 23 ஆம் திகதி நாடாளுமன்றில்

கொழும்பு, ஒக். 21

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை தயாரிப்புப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாக அந்தக் குழுவின் தலைவரும் பிரதிச் சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதற்கமைய அறிக்கை தொடர்பான எதிர்கால நடவ டிக்கை குறித்து நாடாளுமன்றம் தீர்மானிக்கும் என அவர் தெரி வித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலை அடுத்து, மே மாதம் 22ஆம் திகதி சபாநாயகர் கரு ஜயசூரியவினால் விசேட தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் ஜனாதிபதி, பிரதமர், புலனாய்வு அதிகாரிகள், அமைச்சர்கள் உள்ளிட்ட 20இற்கும் மேற்பட்டோர் சாட்சியம் வழங்கியுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சாட்சியம் வழங்கியதை அடுத்து அனைத்துச் சாட்சிப் பதிவுகளும் நிறைவடைந்துள்ளன எனத் தெரிவுக்குழு அறிவித்தது.

இதுவரை மேற்கொண்ட விசாரணை நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சாட்சியங்கள் அனைத்தையும் கொண்டு அறிக்கையை இறுதி செய்து இந்த மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமெனத் தெரிவுக்குழு தெரிவித்திருந்தது.

இருந்தபோதிலும் அறிக்கை தயாரிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக எதிர்வரும் 23ஆம் திகதி குறித்த அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒட்டுசுட்டானில் பெண்ணின் சடலம்!

முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான், கருவேலன்கண்டல் பகுதியில் நேற்றுக் காலை வீடு ஒன்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெண் இறந்தமைக்கான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.

இது கொலையா அல்லது நோயினால் இறந்து இருக்கிறாரா என்பது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சடலம் மருத்துவப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அத்தோடு தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட பொலிஸாரின் சோதனைகள் இடம்பெற்றமையோடு ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# புதிய கட்சி தொடங்க சந்திரிகா யோசனை!

கொழும்பு, ஒக். 21

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திர பொது மக்கள் முன்னணி என்ற பெயரில் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

சந்திரிகா, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களுடன் இது தொடர்பில் இரகசிய கலந்துரையாடல் நடத்தியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர். எனினும் அமைச்சர் சஜித்துக்கு ஆதரவு வழங்குவதற்கு சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இணக்கம் வெளியிட்டுள்ளனர். அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்ள மறுத்துள்ளனர். இதனால் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் அது சுதந்திரக் கட்சியின் இறுதி எனச் சந்திரிக்கா தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ)



# ஐரோப்பிய நாடுகளில் பொதுவான 'யூரோ' கரன்ஸி போல 48 ஆசிய நாடுகளுக்கு பொதுப்பணமாக 'ஆசியா' கரன்ஸி!

## சீன அதிபர் ஸீ ஜின்பிங் – பிரதமர் மோடி சந்திப்பில் ஆராயப்பட்டதாம்

அண்மையில் மாமல்லபுரத்தில் நடந்த சீன அதிபர் ஸீ ஜின்பிங் – பிரதமர் மோடி சந்திப்பில், ஐரோப்பிய யூனியன் நாடுகளில், 'யூரோ கரன்சி' பயன்பாட்டில் உள்ளது போல, ஆசிய நாடுகளுக்கு எனப் பொதுப்பணம் உருவாக்குவது குறித்து இருவரும் முதல் கட்டப் பேச்சு நடத்தினர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

'தமிழகம், கேரளாவில் பா.ஜ. ஆட்சியைக் கொண்டு வருவேன்' எனப் பிரதமர் மோடி சூளுரைத்துள்ளார். எனவே, தமிழகத்தின் மீது பிரதமர் மோடியின் கவனம் அதிகரித்துள்ளது. அதன் வெளிப்பாடுதான், ஐ.நா. சபையில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக் கலியன் பூங்குன்றன் பாடிய பாடலைப் பிரதமர் மோடி பாராட்டிப் பேசி, உலக நாடுகள் அளவில் தமிழ் மொழியின் பெருமையை உயர்த்தி பிடித்தார் எனக் கூறப்படுகிறது.

மேலும், இரு நாடுகளின் நல்லுறவை மேம்படுத்த சீன அதிபர் ஸீ ஜின்பிங்கை மாமல்லபுரத்திற்கு அவர் அழைத்து வந்தபோது தமிழகம் மீது உலக நாடுகளின் கவனம் திரும்பியுள்ளது.

அதேசமயம் ஐரோப்பிய நாடுகளில் 'யூரோ' பணம் பயன்பாட்டில் உள்ளமை போல் ஆசிய நாடுகளிலும் பொதுப் பணத்தை பயன்பாட்டிற்கு அறிமுகப் படுத்துவது குறித்து இருவரும் முதல் கட்ட ஆலோசனை நடத்தினர் என்ற தகவலும் தற்போது வெளியாகி உள்ளது.

இது குறித்து ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி வட்டாரங்கள் கூறியவை வருமாறு:–



2002 ஆம் ஆண்டில் ஐரோப்பிய யூனியனில் உள்ள (பிரிட்டன் தவிர்ந்த) அனைத்து நாடுகளும் தங்களின் பழைய நாணய முறையை ஒழித்து, யூரோ நாணய முறையைப் பயன்படுத்தத் தொடங்கின. இதனால், ஐரோப்பிய யூனியனில் உள்ள சில நாடுகள் பொருளாதாரத்திலும், வர்த்தகத்திலும் முன்னேற்றம் அடைந்துள்ளன. ஐரோப்பா பாணியில், ஆசிய கண்டத்தில் உள்ள, 48 நாடுகளில், பொதுப்பணம் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்து, சீன அதிபரும், பிரதமர் மோடியும் பேச்சு நடத்தி உள்ளனர்.

இந்தியா, அதிக அளவில் இறக்குமதி செய்யும் பொருள்களாக, மசகு எண்ணெய், தங்கம் ஆகியவை உள்ளன. இவற்றை எல்லாம் அமெரிக்கப் பணமான 'டொலர்' கொடுத்து பெற வேண்டியதிருப்பதால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கிறது.

எனவே, ஆசியா நாடுகளில் இடம் பெற்றுள்ள குவைத், ஈரான், ஈராக் போன்ற எண்ணைய் வளம் அதிகமாக உள்ள நாடுகளிடம், அமெரிக்க டொலருக்குப் பதில், பொதுப் பணத்தை இந்தியா வழங்கும்போது, இந்தியப் பொருளாதாரமும், வர்த்தகமும் வளர்ச்சி அடையும் எனக் கருதப்படுகிறது.

ஜப்பான், சிங்கப்பூர், மலேஷியா உள்ளிட்ட 48 நாடுகளிடம் ஒருமித்த கருத்து ஏற்படுமானால், பொதுப் பணம் பயன்பாட்டிற்கு வரும் நடவடிக்கைகளை, சீன அதிபரும், பிரதமர் மோடியும் இணைந்து மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. – இவ்வாறு, அக்கட்சி வட்டாரங்கள் கூறின.

# தமிழிசைக்கு தனி மரியாதை

மாநில ஆளுநர்கள், மத்திய உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அனைத்து ஆளுநர்களும், உள்துறை அமைச்சரை சந்தித்து, ஆலோசனை நடத்துவர். சில ஆளுநர்கள், பிரதமரையும் சந்திப்பர்.



ஆனால், சமீப காலமாக, ஆளுநர்களைச் சந்திப்பை, பிரதமர் மோடி தவிர்த்து வருகிறார்.' முக்கியமான விடயம் குறித்து பேச வேண்டும்' என ஆளுநர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், 'எதுவாக இருந்தாலும் உள்துறை அமைச்சரிடம் சொல்லுங்கள்; முக்கியமான விடயம் என்றால் உள்துறை அமைச்சர், பிரதமரிடம் பேசுவார்' எனப் பிரதமர் அலுவலகத்திலிருந்து சொல்லப்படுகிறதாம்.



தெலுங்கானா ஆளுநராக தமிழிசை சவுந்தரராஜன் பதவியேற்ற பின், சமீபத்தில் டில்லி வந்திருந்தார். உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்தார். பின், பிரதமர் மோடியைச் சந்திக்க நேரம் கேட்டார். பிரதமர் அலுவலகத்திலிருந்து, உடனடியாக அழைப்பு வந்தது. மோடியிடம், தெலுங்கான விவகாரங்கள் குறித்து, தமிழிசை ஆலோசனை நடத்தினார். அதைத் தொடர்ந்து, தமிழக அரசியல் நிலை குறித்தும், பேசினார் எனச் சொல்லப்படுகிறது.

ஆளுநர்களுடனான சந்திப்புக்களைத் தவிர்க்கும் பிரதமர், தமிழிசையை சந்திக்க எப்படி ஒப்புக்கொண்டார் என டில்லி அரசியல் மற்றும் அதிகாரிகள் வட்டாரங்கள் ஆச்சரியப்படுகின்றன. தமிழகத்தின் தமிழிசைக்கு, பிரதமர் தனி மரியாதை கொடுத்தமை அதிகாரிகள் வட்டாரத்தை மட்டுமின்றி, அரசியல் வட்டாரத்திலும், ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழ்நாட்டில் இரு தொகுதிகளில் இன்று இடைத்தேர்தல் வாக்களிப்பு

## வியாழனன்று முடிவுகள் வெளியாகும்

தமிழகத்தில் நாங்குநேரி, விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிகளில் களை கட்டிய இடைத்தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினத்துடன் முடிந்தது. யாருக்கு வெற்றி என்பதை தீர்மானிக்க இன்று இரு தொகுதி மக்களும் வாக்களிக்க உள்ளனர்; 24 ஆம் திகதி வியாழனன்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு தெரியும்.

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில், தி.மு.க. கூட்டணிக் கட்சியான காங்கிரஸின் சார்பில் வேட்பாளர் மனோகரன், அ.தி.மு.க. வேட்பாளர் நாராயணன், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ராஜநாராயணன் உட்பட 23 பேர் களத்தில் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் புகழேந்தி, அ.தி.மு.க. வேட்பாளர் முத்தமிழ் செல்வன், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கந்தசாமி உட்பட 12 பேர் களத்தில் உள்ளனர்.

இரு தொகுதிகளிலும் வேட்பாளர்கள் அதிகம் இருந்தாலும் விக்கிரவாண்டியில் அ.தி.மு.க. – தி.மு.க. இடையிலும், நாங்குநேரியில் காங்கிரஸ் –அ.தி.மு.க. இடையிலும் நேரடிப் போட்டி நிலவுகிறது.




# தஞ்சை பெரியகோவிலின் கும்பாபிஷேகம்; விழாவுக்கு இஸ்ரேல் பிரதமருக்கு அழைப்பு?

தஞ்சை பெரிய கோவில் கும்பாபிஷேகம் விழா அடுத்த ஆண்டு நடக்க உள்ளது. தற்போது, திருப்பணிகள் நடந்து வருகின்றன. அக்கோவிலை கட்டிய ராஜராஜ சோழனின் பெருமையை உலக அளவில் பிரபலப்படுத்த பிரதமர் மோடி விரும்புகிறார்.

அதற்காக, இஸ்ரேல் நாட்டின் பிரதமரை அழைத்து மத்திய அரசின் சார்பில் பிரம்மாண்ட விழா நடத்தவும் பிரதமர் அலுவலகத்தில் ஆலோசிக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே, மும்பையில் உள்ள கப்பல் கட்டுமான நிறுவனத்திற்கு அந்த காலத்திலேயே மிகப்பெரிய கப்பல் படை வைத்திருந்த ராஜராஜேந்திர சோழன் உருவ படத்தை மத்திய அரசு வழங்கி தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(உ)

## குர்துகளின் தலைகளை நசுக்குவோம்; இப்படி மிரட்டுகின்றார் துருக்கி அதிபர்

வடக்கு சிரியாவில் திட்டமிடப் பட்டுள்ள பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து வெளியேறாவிட்டால், குர்து போராளிகளின் தலைகளை நசுக்குவோம் என்று துருக்கியின் அதிபர் ரிசெப் தாயிப் எண்ட்ரோகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குர்துகள் வடக்கு சிரியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்து பின் வாங்கும் வகையில், ஐந்து நாள் களுக்குத் தாக்குதலை இடைநிறுத் தும் உடன்படிக்கைக்கு கடந்த வியாழக்கிழமை துருக்கி ஒப்புக் கொண்டது.

ஆனால், நேற்று (சனிக்கிழமை) போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி விட்டதாக இரண்டு தரப்பினரும் ஒருவர் மீதொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டனர்.

குர்து போராளிகளைப் பயங்கர வாதிகளாகக் கருதும் துருக்கி, சிரியாவுக்குள்ளேயே 'பாதுகாப்பு மண்டலம்' ஒன்றை உருவாக்குவதற்கு விரும்புகிறது.

இந்நிலையில், இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள துருக்கி அதிபர் ரிசெப் தாயிப் எண்ட்ரோகன், போர் நிறுத்த உடன்படிக்கையில்



குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று வரும் செவ்வாய்கிழமைக்குள் குர்துகள் அந்த குறிப்பிட்ட பகுதியை விட்டுவெளியேறவில்லை என்றால், நாங்கள் விட்ட இடத்தில் இருந்து தாக்குதலை ஆரம்பித்து, பயங்கரவாதிகளின் தலைகளை தொடர்ந்து நசுக்குவோம் என்று தெரிவித்துள்ளார்.



# சைபீரியாவில் அணை உடைந்து திடீர் வெள்ளம்

மொஸ்கோ,ஒக்.21

சைபீரியாவில் அணை உடைந்து திடீர் வெள்ளம் ஏற்பட்டதில் 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சைபீரியாவில் கிரஸ்னோயர்ஸ்க் பிராந்தியத்தில் தங்க சுரங்கம் அமைந்துள்ளது. அங்குள்ள சீபா ஆற்றின் மீது அணை ஒன்று கட்டடப்பட்டிருந்தது.



அணை நேற்று முன்தினம் சற்றும் எதிர்பாராத வகையில்திடீரென உடைந்து விட்டது. இதன் காரணமாக தண்ணீர், அந்தப் பகுதியில் அமைந்துள்ள அறைகளுக்குள் புகுந்தது. இதில் சிக்கி 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என முதல் கட்டத் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் கிரஸ்னோயர்ஸ்க் பிராந்திய நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 13 பேர் காணாமல் போய்விட்டனர் எனவும், 14 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரில் 3 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது. சம்பவ இடத்துக்கு கிரஸ்னோயர்ஸ்க் நகரில் இருந்து டாக்டர்கள் குழு விரைந்தது.

உடைந்த அணை விதிமுறைகளை மீறி கட்டப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

காணாமற்போனவர்களைத் தேடும் பணியில் 270 பேரை கொண்ட மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

# செவ்வாய்க் கிரகத்தில் உப்பு ஏரிகள் இருந்தன

## ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

பூமியை போல் செவ்வாய்க் கிரகத்திலும் உப்பு ஏரிகள் இருந்ததை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தின் நிலப்பரப்பில் உள்ள காலே கிரேட்டர் (Gale crater) எனப்படும் 95 மைல் அகலமுள்ள பாறை படிமத்தை க்யூரியாசிட்டி ரோவர் என்ற கருவி உதவியுடன் நாசா ஆராய்ச்சியாளர்கள் 2012 ஆம் ஆண்டு முதல் ஆய்வு செய்து வருகின்றனர்.

சுமார் 350 கோடி ஆண்டுகளுக்கு முன் செவ்வாய்க் கிரகத்தை விண்கல் தாக்கி உருவான இந்தப் படிமத் தில், பல உப்பு ஏரிகள் இருந்ததை டெக்சாஸ் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.



இதனால் அங்கு நுண்ணுயிரிகள் வாழ்ந்திருக்கலாம் எனவும் அவர்கள் கூறு கின்றனர். மேலும், காலப்போக்கில் இந்த ஏரிகள் வறண்டு குளங்களாக மாறின எனவும், அதன்பின் செவ்வாய் கிரகம் தனது காந்தபுலத்தை (magnetic field) இழந்ததா கவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக கிரகத்தின் வளிமண்டலம் மீது சூரியக் காற்று மற்றும் கதிர்வீச்சுகள் பட்டு, அது மென்மையாகி, தண்ணீரை தக்க வைக்க முடியாமல் போனதாகவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 'வாட்ஸ் அப்' சேவைக்கு வரி விதித்த லெபனான்: கொதித்தெழுந்தனர் மக்கள்; பின்வாங்கியது அரசு

பெய்ரூட்,ஒக்.21

லெபனான் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவி வருகிறது. இந்த நிலையில் அந்த நாட்டு அரசு, வரி வருவாயை பெருக்கும் நோக்கத்தில், வாட்ஸ் அப், பேஸ்புக் மெசஞ்சர், ஆப்பிள் பேஸ் டைம் ஆகியவற்றை பயன்படுத்திப்பேசக்கூடிய அழைப்புகளுக்கு வரி விதிக்க அதிரடியாக முடிவு செய்தது.

ஒவ்வொரு அழைப்புக்கும் 0.20 டாலர் (சுமார் ரூ.35) வரி விதிப்பதாக கடந்த வியாழக்கிழமை அறிவித்தது.

இதைக் கேட்டதும் அந்த நாட்டு மக் கள் கொதித்தெழுந்தனர். கடந்த 2 நாள்களாக பல்லாயிரக் கணக்கான மக் கள் வீதிகளில்கூடிஅரசாங்கம் பதவி விலகக் கோரி கோஷங்களைமுழங்கினார்கள். சாலைகளில் டயர்களைக் கொளுத் திப் போட்டார்கள்.

பல இடங்களில் போராட்டக்காரர்களுக்கும், பாதுகாப்பு படைகளுக்கும் இடையே மோதல் வெடித்தது. கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்து போராட்டக்காரர்களை விரட்டியடிக்கின்ற அளவுக்கு நிலைமை மோசமானது.

இந்த மோதல்களில் பலர் படுகாயம் அடைந் தனர். நிலைமை மோசமாவதை உணர்ந்த அரசு அடிபணிந்தது. வாட்ஸ் அப், பேஸ்புக் மெசஞ்சர், ஆப்பிள் பேஸ்டைம் அழைப்புகளுக்கு விதித்த வரியை வாபஸ் பெறுவதாக அறிவித்தது.

ஆனாலும் போராட்டங்கள் ஓய்வதாக இல்லை. எல்லா மக்களுக்கும் உணவு, எரிபொருள், மற்ற அடிப்படை தேவைகளை அரசு நிறைவேற்றி வைக்க வேண்டும், இல்லையேல் பதவி விலக வேண்டும் என்று மக்கள் முழங்கி வருகின்றனர். பிரதமர் சாத் அல் ஹரிரி அரசு என்ன செய்வது என தெரியாமல் விழி பிதுங்கி நிற்கிறது.

# ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவது ஜனவரி வரையில் தாமதமாகும்

லண்டன்,ஒக்.21

பிரெக்ஸிட் விவகாரத்தில் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலகுவது தொடர்பான முடிவை தாமதப்படுத்த வேண்டும் என பிரிட்டிஷ் நாடாளுமன்றம் முடிவு செய்தது. .

ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலகுவது குறித்து வரலாற்று சிறப்புமிக்க வாக்கெடுப்பு பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது. ஐரோப்பிய யூனியனிலிருந்து விலகுவது தொடர்பான உடன்பாடு வெள்ளியன்று எட்டப்பட்டது.



எனினும் இந்த ஒப்பந்தத்தை பிரிட்டனில் உள்ள முக்கிய எதிர்கட்சிகள் எதிர்த்தன. இதனால் ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் விலகுவதற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்குமா என்பதை உலகமே எதிர்நோக்கி இருந்தது.

இந்நிலையில் நேற்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் பிரெக்ஸிட் பிரேரணையின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. அப்போது, பிரதமர் போரிஸ் ஜோன்சனின் பிரெக்ஸிட் ஒப்பந்தம் குறித்த முடிவை தாமதப்படுத்த வேண்டும் என்று பிரிட்டன் எம்.பி.க்கள் வாக்களித்தனர்.

ஒக்டோபர் 31 காலக்கெடுவுக்கு முன்னர் ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களைப் படித்து பார்க்கக் கால அவகாசம் தேவை என்றவர்கள் வாதிட்டனர்.

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை பிரெக்ஸிட் நடவடிக்கையை நீட்டிக்க வேண்டும் என்னும் புதிய சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டு இதன்மீது எம்.பி.க்கள் வாக்களித்தனர்.

322 எம்.பி.க்கள் சட்டத்திருத்தத்துக்கு ஆதரவாகவும், 306 எம்.பி.க்கள் எதிர்த்தும் வாக்களித்தனர். 16 வாக்குகள் வித்தியாசத்தில் அந்த சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் அது சட்டமாக தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இனவாத பிரசாரத்துக்காக என்னை கைது செய்யுமாறு கோருகின்றனர்

## அக்கரைப்பற்றில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, ஒக். 21

என்னை கைதுசெய்யுமாறு பொலிஸ் தலைமையகங்களில் முறைப்பாடு செய்யும் படலம் இப்போது ஆரம்பித்திருக்கிறது. நாங்கள் காப்பாற்றியவர்கள்தான் இந்தக் காட்டிக்கொடுப்பின் பின்னால் இருக்கின்றனர்.

எனது நற்பெயருக்கு களங்கம் விளைவித்து, சிங்கள மக்களை உசுப்பேற்றி இனவாதப் பிரசாரம் செய்வதே இவர்களின் நோக்கமாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்றில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறியதாவது;

தொலைக்காட்சியில் காட்டப்படும் இந்தச் செய்திகளின் பின்னாலிருப்பவர்கள் நாங்கள் காப்பாற்றியவர்கள்தான், இன்றும் எங்களால் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருப்பவர்கள்தான். நாங்கள் எவ்வளவு நன்மைகள் செய்தாலும் தொடர்ந்தும் விமர்சிக்கப்படுவது குறித்து அலட்டிக்கொள்வதில்லை. எங்களுக்கு களங்கம் விளைவிக்க நினைத்தால், அவர்களாகவே களங்கப்பட்டுப் போகின்ற நிலைமைதான் ஏற்படும்.

ஏகாதிபத்திய சக்திகளின் கூலிப்படையான தாக்குதல்தாரிகள் எங்களுக்குள் ஒளிந்திருந்த செய்தி யாருக்கும் விளங்கவில்லை. காத்தான்குடியிலுள்ள ஹிஸ்புல்லா, சிப்லி பாறுக், நல்லாட்சிக்கான முன்னணி உள்ளிட்ட யாருக்கும் இவர்களது உண்மைமுகம் தெரியாமல், இரண்டாயிரம் வாக்குகளுக்காக தேர்தல் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டிருந்தனர்.

ஈஸ்டர் தினத்தில் மிகக் கொடூரமான பயங்கரவாத தாக்குதலை மேற்கொண்ட இந்தக் கும்பல், வெளிச்சக்திகளின் எடுபிடிகளாக மாறுவார்கள் என்று அப்போது யாரும் யூகிக்கவில்லை.

நாடாளுமன்ற தெரிவிக்குழுவில் நாங்கள் செய்த ஆய்வின் பின்னணியில், நிறைய விடயங்களை சிபார்சுகளாக உள்ளடக்கிய அறிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி வெளிவரவுள்ளது.

அந்த அறிக்கையில், முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா மீது எல்லாப் பழிகளையும் சுமத்துவது நியாயமற்றது. அதில் மெத்தனப் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்று நான் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் இறுதிக் கூட்டத்திலும் வாதிட்டு விட்டுத்தான் வந்திருக்கிறேன்.

அரசியல் ரீதியில் எங்களுக்கு முரண்பாடுகள் இருந்தாலும், சமூகத்தின் தலைமை ஒன்றின்மீது அநியாயமாக பழிசுமத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பெருந்தலைவர் உருவாக்கிய இந்த மகா விருட்சத்தின் நிழலில் வளர்ந்த யாராக இருந்தாலும் அவர்களை பாதுகாக்கும் வேலையை நாங்கள் செய்வோம். அரசியல் மேடைகளில் எங்களுக்குள் விமர்சனம் இருக்கலாம். ஆனால், இனவாதிகள் அவர்கள் மீது அநியாயமாக பழிசுமத்துகின்றபோது, அவர்களை பாதுகாக்கும் பணியை நாங்கள் பெருந்தன்மையுடன் செய்வோம்.



அவருடைய மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழக விவகாரத்திலும் உயர் கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் அதனை மெத்தனப் போக்குடன்தான் கையாண்டேன்.

பல்கலைக் கழகத்தின் பொதுநலம் மீதான இனவாத சக்திகளின் காழ்ப்புணர்ச்சிக்கு இடமளிக்க முடியாது. அவரையும் முஸ்லிம் சமூகத்தையும் காப்பாற்றும் பணியை செய்கின்றவர்களாகத்தான் நாங்கள் இருந்துவருகிறோம்.

ஆனால், இவர்கள் தெரிவுக்குழுவுக்கு முன்னால் சாட்சியமளிக்கும் போதும் எனக்கு விரல்நீட்டும் வேலையைத்தான் செய்தார்கள். இதுகுறித்து நான் அலட்டிக்கொள்ளவில்லை. இதில் சலனம் ஏற்படுகின்ற தலைமையாக நான் இருந்திருந்தால், இவ்வளவு தூரம் வந்திருக்க முடியாது.

தனிமனித அரசியலின் பின்னால் செல்வதன் பேராபத்தை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். குறுநில மன்னர்கள் கூடாரங்களுக்குள் கட்சிகளை அமைத்துக்கொண்டு தங்களை மாத்திரம் சந்தைப்படுத்துவதை அனுமதிக்க முடியாது. இயக்க ரீதியான அரசியலுக்கு மக்கள் தயாராக வேண்டும். பரந்து விரிந்த ஆல விருட்சத்தை அனைவரும் ஆரத்தழுவ வேண்டும்.

தனித்தனி கட்சிகளாக பிரிந்துநின்று எதையும் சாதிக்கமுடியாது. எல்லா கட்சிகளும் அணிதிரண்டு ஓரணியில் நிற்கவேண்டும் என்ற அறைகூவலை நான் விடுக்கின்றேன். ஏப்ரல் தாக்குதலின் பின்னர், முஸ்லிம் தலைமைகள் ஒட்டுமொத்தமாக பதவிதுறந்து சமூகத்தைக் காப்பாற்றியபோது மக்கள் புளகாங்கிதம் அடைந்தனர். அப்போது, இந்த குறுநில மன்னர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.

ஏகாதிபத்திய அரசியலுக்காக சமூகத்தை பலிபீடத்தில் நிறுத்தும் அரசியல்வாதிகளை மக்கள் நிராகரிக்க வேண்டும். பிரச்சினைகள் வருகின்றபோது அதற்கெதிராக முன்னிற்கின்ற இளைஞர்களை அடையாளம் காண்பதற்காக கிறீஸ் பூதங்களை கொண்டு வந்ததை இன்னும் மறந்துவிடவில்லை.

இவர்களிடம் சரணாகதி அரசியல் செய்வதற்கு நாங்கள் எப்போதும் தயாரில்லை. எமது இருப்பை தீர்மானிப்பதற்காக கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை புத்திசாதுரியமாக பயன்படுத்தவேண்டும்–என்றார்.

(ஐ)

---

யாழ்.நீதிமன்றக் கட்டடம் மீது தாக்குதல்;

# 35 சந்தேக நபர்களுக்கு எதிராக 4 ஆண்டின் பின் குற்றப்பத்திரம்

யாழ்ப்பாணம், ஒக். 21


யாழ்ப்பாணம் நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் 4 ஆண்டுகளின் பின் 35 சந்தேகநபர்களுக்கு எதிராக 5 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2015ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைக்கு நீதிகேட்டு யாழ்ப்பாணம் நகரில் முன்னெடுக்கப்பட்ட பேரணியில் பங்கேற்றவர்கள், அந்த வழக்கின் பிரதான சூத்திரதாரி எனக் குறிப்பிடப்பட்ட சுவிஸ்குமாரை யாழ்ப்பாணம் நீதிமன்றுக்குள் வைத்துள்ளதாகத் தெரிவித்து அதனைச் சூழ்ந்துகொண்டனர்.

இதன்போது சிலரால் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீது கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டது.

நீதிமன்ற வளாகத்தைச் சூழ களேபரம் ஏற்பட்டதால், பொலிஸார், சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து கண்ணீர்ப் புகைத் தாக்குதல் நடத்தப்பட்டு நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு கட்டம் கட்டமாக பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களில் 72 பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வந்தது.



அதில் 35 பேருக்கு எதிராக நீதிமன்றக் கட்டடம் மீது தாக்குதல்நடத்தியமை மற்றும் சிறைச்சாலை வாகனத்தைத் தாக்கியமை ஆகிய குற்றச்சாட்டின் கீழும் ஏனையோருக்கு எதிராக பொலிஸ் உத்தியோகத்தரைத் தாக்கியமை, யாழ்.நகரில் பொலிஸ் காவலரணைத் தாக்கி சேதப்படுத்தியமை மற்றும் சிறைச்சாலை மீது கல் எறிந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு 3 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. எனினும் அந்த வழக்கை முடிவுறுத்துவதில் பொலிஸார் அக்கறையின்றி இழுத்தடிக்கின்றனர்.எனவே பொலிஸார், சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்று சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யவேண்டும்.

அதுவரை சந்தேகநபர்கள் மன்றில் முன்னிலையாகத் தேவையில்லை. மீளவும் அழைப்புக் கட்டளை வரும் போது, மன்றில் முற்படவேண்டும் என்று 2018ஆம் ஆண்டு ஜூன் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் வழக்குக் கோவை சட்டமா அதிபர் திணைக்களத்தால் பெறப்பட்டு குற்றச்சாட்டுக்களை சாட்சிகள், சான்றாதாரங்கள் ஊடாக நிரூபிக்கக் கூடிய சந்தேக நபர்களுக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றப்பத்திரிகை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத கூட்டம் கூடியமை, நீதி அமைச்சுக்குச் சொந்தமான நீதிமன்றச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, சிறைச்சாலைக்குச் சொந்தமான சொத்துக்கு சேதம் விளைவித்தமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தேகநபர்களை வரும் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கான அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் நீதிமன்றில் சந்தேகநபர்களுக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மொட்டு மேடையில் ஏறமாட்டாதாம் சு.க.

## கூறுகின்றார் தயாசிறி ஜயசேகர



கொழும்பு, ஒக். 21

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுட னும், அதன் ஜனாதிபதி வேட்பாளர் கோட் டாபய ராஜபக்ஷவுடனும், புரிந்துணர்வு உடன்பாடுகளைச் செய்து கொண்டுள்ள போதும், அந்தக் கட்சியுடன் இணைந்து சுதந்திரக் கட்சி பரப்புரைகளை மேற் கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், கோட்டாபய ராஜபக் ஷக்கும் இடையில் நேற்றுமுன்தினம் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது.

கொழும்பில் நடந்த இந்த நிகழ்வில், சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகரவும், கோட்டாபய ராஜ பக்ஷவும் உடன்பாட்டில் கையெடுத்திட்டனர்.

இந்த உடன்பாட்டில் கையெழுத்திட் டாலும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ள போதும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர் தல் பேரணிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பங்கேற்காது என்று சுதந்திரக் கட்சி யின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளி நடந்த கட்சியின் மத் திய குழுக் கூட்டத்துக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட அவர்–

பொதுஜன பெரமுன பேரணிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சந்தித்த துன்புறுத்தல்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும் 5 ஆயிரம் கூட்டங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

அத்துடன் வீடு வீடாகச் சென்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பரப்புரை செய்யவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.

எனினும், நாங்கள் பொதுஜன பெரமுனவின் மேடையில்– அவர்களுடன் இணைந்து ஏறுவதற்குத் தயாரில்லை. நாங்கள் அடிமட்டத்தில் இருந்து பணியாற்றுவோம்–என்றார். (ஐ)

# நம்பிக்கைத்தான் வாழ்க்கை; எம்மை நம்புங்கள் மக்களே!

## டக்ளஸ் தெரிவிப்பு



வவுனியா, ஒக். 21

வறிய மக்களின் அவல வாழ்வு மாற்றம்பெற்று அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது வாழ்வியல் முறையில் வெற்றிகொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். அத்தகைய ஓர் உறுதி மிக்க சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதா கவே எமது ஒவ்வொரு செயற்பாடுகளும் இருக் கின்றன.

நாம் தேர்தலுக்காக எதனையும் கூறுவது கிடையாது. உங்கள் பிரச்சினைகள் ஒவ்வொன் றிற்கும் நாம் தீர்வு கண்டு தருவோம். அதற்கான வாய்ப்புகள் தற்போது கிடைத்துள்ளன. நம்பிக் கையே வாழ்க்கை. எம்மை நம்புங்கள். எமக்கு உங்களின் அரசியல் பலத்தை தாருங்கள். நான் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை கண்டு தருவேன் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவாவனந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா மறவன்குளம் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தக் கிராமத்தை உருவாக்கியோர் நாம்தான். அந்தவகையில் இந்த கிராமத்தின் அபிவிருத்தி குறித்து எனக்கு அதிக அக்கறை உண்டு.

கோட்டபாயவின் வெற்றியில் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு தீர்வுகளைக் பெற்றுக் கொடுக்க எம்மால் முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கும் எமக்கும் மிக நெருங்கிய புரிந்துணர்வு நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

இந்த புரிந்துணர்வு தான் கடந்த காலங்களில் நாம் எமது மக்கள் எதிர்கொண்டுவந்த பல பிரச் சினைகளுக்கும் தேவைப்படுகளுக்கும் எம்மால் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முடிந்திருந்தது.

நாம் எங்கள் மீதே நம்பிக்கை கொண்டவர் கள். எம்மால் மத்தியில் ஆட்சிக்கு வருபவர்களு டன் இணைந்து தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை என்னிடம் உள்ளது. அதனால்தான் நாம் எம்மை நம்புங்கள், செய்வோ, செய்விப்போம் என்று நம்பிக்கையுடன் உங்களுக்குத் தொடர்ச்சியாக கூறிவருகின்றேன்.

நான் வாக்கு கேட்டு வருவது எனது வெற்றிக் காக அல்ல. அது உங்கள் ஒவ்வொருவரதும் வெற்றிக்கானதாகவே இருக்கும்.

அந்தவகையில் உங்கள் வெற்றியை உறுதி செய்ய நீங்கள் இம்முறை பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளர் கோட்டபய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதி செய்யுங்கள். நாம் செய்வோம், செய்விப்போம்–என்றார். (ஐ)

# தமிழ் அகதி குடும்பம் நாடுகடத்தல் வழக்கு டிசெம்பருக்கு ஒத்திவைப்பு!

கான்பரா, ஒக். 21

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்படும் ஆபத்தில் சிக்கியுள்ள பிரியா– நடேசலிங்கம் தமிழ் அகதி குடும்பம் தொடர்பாக நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் விசாரணை எதிர்வரும் டிசெம்பர் 16 நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பிரியா– நடேசலிங்கம் குடும்பம் மேலும் சில மாதங்களுக்கு கிறிஸ்மஸ் தீவிலேயே வைத்திருக்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது.

இந்தக் குடும்பம் சார்பாக ஆஜராகும் குடி யேற்ற வழக்கறிஞரான கரினா போர்ட், இறுதி விசாரணைக்கு இன்னும் சில மாதங்கள் ஆகலாம் எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கிறிஸ்மஸ் தீவில் இருப்பது மன ரீதியான துன்புறுத்தலாக இருப்பதாகக் கூறியி ருந்த பிரியா–நடேசலிங்கம் இணையர், அவர்க ளது குழந்தைகள் பாதுகாப்பற்ற நிலையில் வாழ் வதாக வேதனை தெரிவித்திருந்தனர்.

கடந்த 2012 இல் படகு வழியாக இலங் கையிலிருந்து வெளியேறி ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்த நடேசலிங்கமும், 2013 இல் தஞ்சமடைந்திருந்த பிரியாவும் ஆஸ்திரேலி யாவில் சந்தித்த பின் திருமணம் செய்து கொண் டனர். தஞ்சக் கோரிக்கையாளர்களான அவர் களுக்கு ஆஸ்திரேலியாவிலேயே இரு பெண் குழந்தைகள் (கோபிகா, தருணிகா) பிறந்தன.



ஆஸ்திரேலியாவின் பிலோயலா நகரில் வசித்து வந்த இவர்களின் விசா, கடந்த மார்ச் 2018 இல் காலாவதியாகியதாக கைது செய்யப் பட்டுமெல்போர்ன்தடுப்புமுகாமில்வைக்கப்பட்டனர்.

அண்மையில், அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட இருந்த நிலையில் அந்த முயற்சி கடைசி நிமிட நீதிமன்ற தலையீட்டால் தடுத்து நிறுத்தப்பட்டது. பின்னர், அவர்களை கிறிஸ்துமஸ் தீவுக்கு கொண்டு சென்றது ஆஸ்திரேலிய அரசு.

பிரியா, நடசேலிங்கத்தின் தஞ்சக்கோரிக் கைக்கான அத்தனைவிதமான சட்டவாய்ப்புகளும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், இரண்டு வயது குழந்தை தருணிகாவுக்கு பாதுகாப்பு விசா வழங்கப்பட்டால் இந்தக் குடும்பம் ஆஸ்திரேலி யாவில் வாழக்கூடிய சூழல் ஏற்படலாம். (ஐ)

# வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் தேர்தலை அவதானிப்பதில் அதிக ஆர்வம்

கொழும்பு, ஒக். 21

அடுத்த மாதம் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மீது சில வெளிநாட்டுப்புலனாய்வுஅமைப் புகள் முதல்முறையாக அதிக ஆர்வம் காட்டுகின்றன என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள் ளது.

வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகளின்முகவர்கள்பலர் ஜனாதிபதித் தேர்தல் தொடர் பான தகவல்களைச் சேகரிப் பதற்காக கொழும்புக்கு வந்துள் ளனர்.

## கொழும்பு நோக்கி படையெடுப்பு

அரசியல் கட்சிகள் எவ்வாறு எதிர்த்துப் போட்டியிடுகின்றன என்பதைக் கவனிப்பதற்காகப் புலனாய்வு அமைப்புகள் இரகசி யமாகப் பணியில் ஈடுபட்டுள் ளன.

வெளிநாடுகளின் தலை யீடுகள், மற்றும் கட்சிகளுட னான தொடர்புகள் குறித்து அவர்கள் கரிசனை கொண்டுள் ளார்கள் தோன்றுகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள் ளது. (ஐ)

## ரி-10 தொடரில் விளையாட 7 இலங்கை வீரர்கள் ஒப்பந்தம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள ரி-10 கிரிக்கெட் தொடரில் விளையாடுவதற்காக 7 இலங்கை வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இம்முறை நடைபெறவுள்ள ரி-10 லீக் தொடருக்கான வீரர்கள் ஏலம் நடைபெற்றுள்ளது.

இதில், கடந்த வருடம் இலங்கை அணியின் 6 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த நிலையில், இம்முறை 7 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

நடைபெற்று முடிந்த பாகிஸ்தான் தொடரில் பிரகாசித்திருந்த வனிந்து ஹசரங்க, தசுன் சானக, பானுக ராஜபக்ஷ மற்றும் முன்னணி வீரர்களான லசித் மாலிங்க, திசர பெரேரா, நிரோஷன் டிக்வெல்ல மற்றும் குசல் பெரரா ஆகியோரே இவ்வாறு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.




லசித் மலிங்க, தசுன் சானக மற்றும் வனிந்து ஹசரங்க ஆகிய மூன்று வீரர்களும் மரதா அரேபியன்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

நிரோஷன் டிக்வெல்ல டீம் அபுதாபி அணியிலும், திசர பெரேரா பங்ளா டைகர்ஸ் அணியிலும், பானுக ராஜபக்ஷ டெக்கன் க்ளேடியேட்டர்ஸ் அணியிலும் குசல் பெரேரா டெல்லி புல்ஸ் ஆகிய அணிகளிலும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ)




### தெற்காசிய விளையாட்டு விழாவில்

## 605 இலங்கை வீரர்கள் பங்கேற்பு!

தெற்காசிய விளையாட்டு விழாவில் 605 இலங்கை வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

13ஆவது தெற்காசிய விளையாட்டு விழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நேபாளத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவுகள், நேபாளம், பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட 7 நாடுகள் பங்கேற்கவுள்ள இம்முறை போட்டிகளில் இலங்கை யிலிருந்து 605 வீர வீராங்கனைகளும், 200 பேர் கொண்ட தொழில்நுட்ப அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நேபாளத்தில் உள்ள காலநிலைக்கு பழக்கப்படுத்திக் கொள்ளும் நோக்கில் மெய்வல்லுனர், நீச்சல் மற்றும் குத்துச் சண்டை ஆகிய போட்டிகளில் பங்குபற்றுகின்ற வீரர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 20ஆம் திகதி நேபாளத்துக்கு அனுப்பி வைப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய இம்முறை தெற்காசிய விளையாட்டு விழாவில் 27 போட்டி நிகழ்ச்சிகளுக்காக சுமார் 605 வீர வீராங்கனைகள் இலங்கையிலிருந்து பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன், 95 பயிற்சியாளர்கள், 13 உடற்கூற்று நிபுணர்கள், 15 மசாஜ் நிபுணர்கள், 10 வைத்தியர்கள், 25 முகாமையாளர்கள், 15 மேற்பார்வையாளர்கள் மற்றும் 5 விசேட ஆலோசகர்கள் இம்முறை தெற்காசிய விளையாட்டு விழாவுக்கான இலங்கை அணியுடன் பயணிக்கவுள்ளனர்.

## ஆஸி. தொடரில் அதிரடி காட்டினால் ரி-20 உலககிண்ண அணியில் வாய்ப்பு

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான ரி-20 தொடரில் சிறப்பாக விளையாடும் வீரர்கள், எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ண தொடரில் விளையாடும் வாய்ப்பை பெறுவார்கள் என இலங்கை ரி-20 அணியின் தலைவர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடனான ரி-20 வரலாற்று வெற்றியைத் தொடர்ந்து, இலங்கை கிரிக்கெட் அணி, ரி-20 தொடரில் விளையாடுவதற்காக ஆஸ்திரேலியா செல்லவுள்ளது.

இந்த நிலையில், இத்தொடர் குறித்து ரி-20 அணியின் தலைவர் லசித் மலிங்க கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்–

எனக்கு மிக மகிழ்ச்சி உலகின் முதல்நிலை அணியை வீழ்த்தி, அனைவரும் எதிர்பார்த்தது போல எதிர்காலத்தில் சிறந்ததொரு இலங்கை அணி உள்ளது என உலகிற்கு அறிய தந்தமைக்கு. பாகிஸ்தான் அணியுடனான தொடரில், கடந்த தொடர்களுடன் ஒப்பிடுகையில், நான், குசல் பெரேரா, நிரோஷன் டிக் வெல்ல ஆகிய மூன்று வீரர்களே விளையாடவில்லை. குசல் மெண்டிஸ் காயம் காரணமாக உடற் தகுதியை எட்டாததால் விளையாடவில்லை.




மூன்று வீரர்களின் இல்லாத போது, இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடியது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வலுவான இளம் வீரர்கள் கொண்ட இலங்கை அணி, பாகிஸ்தானில் விளையாடியது போலவே ஆஸ்ரேலியாவிலும் சிறப்பான திறமையை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கின்றேனர். இதுதான் இளம் வீரர்களுக்கு சிறப்பான பயிற்சி போட்டியாக அமையவுள்ளது. காரணம் எதிர்வரும் ஆண்டு ஆஸ்திரேலியாவில் தான் ரி-20 உலகக் கிண்ண தொடர் நடைபெறவுள்ளது.

ஆகவே இத்தொடரில் சிறப்பாக விளையாடும் வீரர்கள், அணியில் நிரந்தர இடத்தை பிடித்துக் கொள்வார்கள். எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணத்திற்கு இலங்கை அணியை யார் தலைமைதாங்கினாலும் எனக்கு அதைப் பற்றி கவலையில்லை. ஆனால் நான் ரி-20 உலகக் கிண்ணத்தின் போது, சிறந்ததொரு அணியை உருவாக்கி விட்டு செல்வதே என கடமையாக பார்க்கின்றேன். தற்போது சிறந்த 16 பேர் கொண்ட இலங்கை அணியே ஆஸ்திரேலியா செல்லவுள்ளது.

அணியில் சிறப்பான ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். எனினும் யார் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்குவார்கள் என்பது குறித்து தீர்மானிக்கப்படவில்லை ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பயிற்சி போட்டியின் பின்னர், சிறப்பாக விளையாடும் வீரர்கள், 1,2,3 என வரிசைப்படுத்தப் படுவார்கள்.

இலங்கை கிரிக்கெட் அணியின் எந்த காலகட்டத்தை எடுத்தாலும் அஞ்சலோ மத்தியூஸ் சிறப்பான வீரராகவே உள்ளார். ஆனால் அவர் கடந்த காலங்களில் தொடர்ந்து உபாதைக்குள்ளாகியுள்ளார்.

ஆகையால் அவரால் அணியில் தொடர்ந்து விளையாட முடியவில்லை. எனினும் அவர் எப்போது வேண்டுமானாலும் 11பேர் கொண்ட அணியில் உள்வாங்கப்படலாம். அதேபோல தான் அசேல குணரத்னவும் சிறந்த வீரர் அவரும் தற்போது உபாதையில் பாதிக்கப்பட்டுள்ளார்–என்றார்.

ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி, ஒக்ரோபர் 27ஆம் திகதி முதல் நவம்பர் 1ஆம் திகதி வரை 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடவுள்ளது.

இதன் முதல் ரி-20 போட்டி 27ஆம் திகதி அடிலெய்டிலும், இரண்டாவது ரி-20 போட்டி 30ஆம் திகதி பிரிஸ்பேன் மைதானத்திலும், மூன்றாவது ரி-20 போட்டி நவம்பர் முதலாம் திகதி மெல்போர்னிலும் நடைபெறவுள்ளது.

## ரோகித் சர்மா இரட்டைச் சதம்




தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ரோகித் சர்மா இரட்டைச் சதம் விளாசியுள்ளார்.

இந்தியா - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் நடைபெற்று வருகின்றது.

இரண்டாவது நாளான நேற்று சிறப்பாக விளையாடிய ரோகித் சர்மா இரட்டை சதம் அடித்தார்.

இது அவரது கன்னி டெஸ்ட் இரட்டைச் சதமாகும். ரோகித் சர்மா 28 பவுண்டரியும் 6 சிக்சர்களும் அடங்களாக 212 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டமிழந்திருந்தார்.

இரட்டை சதம் விளாசிய ரோகித் சர்மாவிற்கு ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் ரோகித் சர்மா மூன்று இரட்டை சதங்களை விளாசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 13 அம்சக் கோரிக்கையை கோட்டா மறுத்தாலும் பேச்சுக்கு நாம் தயார்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்துள்ள 13 அம்ச கோரிக்கைகள் குறித்து விவாதிக்க ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ மறுத்தாலும் அவரைச் சந்திக்கத் தாங்கள் தயாராகவே இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சில் ஈடுபடவுள்ளதாக ஐந்து தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அறிவித்திருந்தன.

இதனையடுத்து அந்தக் கோரிக்கைகள் உள்ளிட்ட ஆவணத்துடன் வந்தால், அது தொடர்பாக பேசத் தயாரில்லை எனப் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக கருத்துரைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசும் முடிவு ராஜபக்ஷ அணியினருக்கு இருந்ததென்றும், அந்த முடிவு தற்போதும் இருந்தால் அவர்களைச் சந்திக்கத் தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என எந்த முடிவும் தற்போது எடுக்கப்படவில்லை என்றும், இறுதி முடிவை



எட்டு வதற்கு முன்பு அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்தவுள்ளதாகவும் சுமந்திரன் கூறினார்.

# 10 வருடங்கள் ஆட்சி செய்த ராஜபக்ஷாக்களால் புதிய நாட்டை உருவாக்க முடியவில்லையே!

## கிண்டலடிக்கின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஒக். 21

சுமார் 10 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்த ராஜபக்ஷாக்களால் புதியதொரு நாட்டை உருவாக்க முடியாமல் போனது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

லக்கலையில் கடந்த இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷ புதிய நாடு ஒன்றை உருவாக்க போவதாக கூறுகின்றார்.

சுமார் 10 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்த ராஜபக்ஷாக்களால் புதியதொரு நாட்டை உருவாக்க முடியாமல் போனது. ஆகவே தற்போது மீண்டும் புதிய நாட்டை உருவாக்க போவதாக கூறுவது எவ்வாறு?

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சி செய்த விதத்தை போன்றதொரு ஆட்சியை நடத்தவே அவர்கள் மீண்டும் அரசாங்கத்தை தருமாறு கேட்கின்றனர்.

தமது முன்னைய 10 வருட ஆட்சியில் பொருட்கள் சேவைகளின் விலையை குறைத்து மக்களுக்கு நிவாரணம் அளிக்காதவர்கள் தற்போது அவற்றை செய்வதாக கூறுவது எவ்வாறு?

தற்போதைய அரசு 2015 இல் ஆட்சிக்கு வந்தபோது பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 162 ரூபாவாக இருந்தது. அதேபோல் அன்று டீசல் லீற்றர் ஒன்றின் விலை 118 ரூபாவாக காணப்பட்டது. ஆனால் இன்று 104 ரூபா. அன்று மண்ணெண்ணை லீற்றர் ஒன்றின் விலை 110 ரூபா இன்று 90 ரூபாவாகும்.

அதேபோல் அன்று சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 2,650 ரூபாவாக காணப்பட்டது. இன்று அதன் விலை 1,493 ரூபா, அன்று பருப்பு ஒரு கிலோ 240 ரூபாவாக இருந்ததுடன் இன்று 120 ரூபாவாக அது குறைந்துள்ளது.

அதேபோல் அன்று 400 கிராம் பால்மா பைக்கற்றின் விலை 410 ரூபாவாக காணப்பட்டது இன்று 345 ரூபாவாகக் குறைந்துள்ளது. சீனி அன்று 120 ரூபாவாகக் காணப்பட்ட நிலையில் இன்று அதன் விலை 100 ரூபாவாகும். டின் மீன் அன்று 275 ரூபாவாக காணப்பட்டதுடன் இன்று அதன் விலை 190 ரூபாவாகக் காணப்படுகின்றது.

ராஜபக்ஷ அரசு அன்று எரிபொருள் விலை ஏற்றத்திற்கு எதிராக போராட்டம் நடத்திய சிலாபம் அந்தோனி என்பவர் மீது துப்பாக்கி சூடு நடத்திக் கொலை செய்தது.

சம்பள உயர்வை வலியுறுத்திப் போராட்டம் நடத்திய ரொசேன் சானக்க மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தி அவரை கொலை செய்தனர்.



அதேபோல் குடிதண்ணீர் கேட்டுப் போராடிய ரத்துபஸ்வல மக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர்.

அதற்கு பதிலாக 2015ஆம் ஆண்டு நாம் மக்களுக்குச் சுதந்தரம் வழங்கினோம். அன்று துப்பாக்கிச் சூட்டை உட்கொண்டதற்கு பதிலாக நாம் சோறு உண்ணும் யுகத்தை ஏற்படுத்தினோம்.

அதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெடிகுண்டுகளை உணவாக உட்கொள்ள மீண்டும் வாய்ப்பளிப்பதா? அல்லது தற்போதுள்ள சூழலை போன்று சோறு சாப்பிடுவதற்கு வாய்ப்பளிப்பதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

சோறு சாப்பிடுவதற்கு ஆசைப்பட்டால் அன்னம்சின்னத்திற்குவாக்களித்துசஜித்பிரேமதாசவை ஜனாதிபதியாக தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஐ)

# யாழ்ப்பாண விமான நிலையத்தை வைத்து இனவாதம் பேசுகின்றனர்

## அனுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 21

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வைத்துச் சிலர் இனவாதம் பேசுகின்றனர் எனத் தேசிய மக்கள்சக்தியின் ஜனாதிபதிவேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அரசியல் மேடைகளில் பலாலி விமான நிலையத்தின் பெயர்ப்பலகை தொடர்பாகப் பேசப்படுவதை நான் கண்டேன்.

சில மாகாணங்களில் சிங்கள மொழி இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தமிழ் மொழி முதலில் உள்ளதாகவும் பாரிய சேறுபூசும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களின் கட்சி அலுவலகத்தில் அவர்களும் அவ்வாறே பயன்படுத்தியுள்ளனர். இதனை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது?

இந்த விடயம் சிங்கள மக்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் அரசியலரங்கில் சர்ச்சைக்கு வித்திடுகின்ற பிரச்சினையாக மாறியுள்ளது. யாழ்ப்பாணத்தில் கோட்டாபயவின் அலுவலகத்திலுள்ள பெயர்ப்பலகையிலும் மொழிகள் அந்த வரிசையிலேயே உள்ளன.

அது யாழ்ப்பாணத்தின் வாக்குகளைப் பெறுவதற்கு. இது சிங்கள வாக்குகளைப் பெறுவதற்கு. இத்தகைய அரசியல்வாதிகளை வெறுத்து நிராகரிக்க வேண்டும்-என்றார். (ஐ)



# மாணவியுடன் குடும்பம் நடத்திய இளைஞனும் உடந்தையாக இருந்த பெண்மணியும் மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 21

வலிகாமம் பகுதியைச் சேர்ந்த பதின்ம வயது மாணவி ஒருவரை அவரது பெற்றோரின் பாதுகாப்பிலிருந்து அழைத்து வந்து குடும்பம் நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் 19 வயது முஸ்லிம் இளைஞன் மற்றும் அவருக்கு உடந்தையாகவிருந்த பெண் ஒருவரையும் விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

19 வயது இளைஞனுக்கும் 15 வயது நிரம்பிய மாணவிக்கும் காதல் ஏற்பட்டுப் பெண்ணின் உறவினர் வீடொன்றில் தங்கியிருந்துள்ளனர். அதுதொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மாணவியின் பெற்றோர் முறைப்பாடு வழங்கினர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மாணவியையும் இளைஞனையும் யாழ்ப்பாணம் நகரிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்டனர். மாணவி மருத்துவ சோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இளைஞனும் அவருக்கு தங்குமிடம் வழங்கி உடந்தையாகவிருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

அத்துடன், வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இளைஞனையும் பெண்ணையும் யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ சோதனைக்கு உட்படுத்த உத்தர விட்ட நீதிமன்று, பெண்ணின் கைக்குழந்தையைச் சிறைச்சாலையில் தாயார் வைத்திருக்கவும் அனுமதியளித்தது. (ஐ)

# பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்ட பல்கலை மாணவர்களின் நினைவேந்தல்






யாழ்ப்பாணம், ஒக். 21

பொலிஸாரால் கடந்த 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி மிலேச்சத்தனமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களான நடராசா கஜன், பவுண்ராஜ் சுலக்சன் ஆகியோரின் மூன்றாம் ஆண்டு நினைவுதினம் நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கேட்போர் கூடத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ்.பி.எஸ். பபில்ராஜ் உருவப்படத்திற்கு மாலை அணிவிக்க மாணவர் ஒன்றியத் தலைவர் என். திவாகரன் பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து ஏனைய பீட மாணவர் ஒன்றியப் பிரதிநிகள், மாணவர்கள் சுடர்களை ஏற்றினர்.

(ஐ -07)

அமைதிப் படை விவகாரம்:

## ஐ.நா.விடம் நியாயம் கோரும் இலங்கை!

கொழும்பு, ஒக். 21

ஐக்கிய நாடுகளின் அமைதிப் படைப் பணிக்கு 1960ஆம் ஆண்டு முதல் பங்களிப்புச் செய்துவரும் இலங்கைக்கு நியாயத்தை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் இலங்கை கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொது அமர்வின் ஐந்தாவது குழுக் கூட்டத்தில் இலங்கைக் குழுவின் பிரதிநிதியான, கனடாவுக்கான பிரதித் தூதுவர் சித்தாரா கான் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

பல உள்ளூர்ப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டிய நிலையில், தற்போது இலங்கை உரிய முறையில் மதிப்பீடுகளை வழங்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை நிதி நெருக்கடியை எதிர்நோக்குவதன் காரணமாகச் சிக்கன நடவடிக்கைகள் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

இருப்பினும் உறுப்பு நாடுகளிடம் இருந்து பெறப்படும் வளங்களை திறமையுடனும் பக்கச் சார்பற்ற நிலையிலும் வெளிப்படைத் தன்மையுடன் பயன்படுத்த அவசியம் குறித்து அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது, செயலாளர் நாயகம் வழங்கிய சில உறுதிப்பாடுகளுக்கு இலங்கைப் பிரதிநிதிகள் தமது பாராட்டைத் தெரிவித்தனர்.

குறிப்பாக கையிலிருப்பில் உள்ள நிதிக்கு அமைய அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்குப் படையணி மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கு அவர் உறுதியளித்துள்ளார்.

இது தவிர, அமைதி காக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகள் போன்றவற்றை வழங்க உறுதியான செயற்பாடு மேற்கொள்ளப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## சஜித்தின் வெற்றியில்தான் மக்களின் நிம்மதி உள்ளது

திகாம்பரம் கூறுகின்றார்



கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றி பெற்றால்தான் மலையக மக்கள் நிம்மதியாக வாழ முடியுமென அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மலையகத்திலுள்ள தலைவர் ஒருவர் கூறுகிறார், இங்குள்ள மக்களுக்கு வீடமைப்பு திட்டத்தை மேற்கொண்டு கிராமங்கள் அமைக்க அவர் நினைத்திருந்ததாகவும் அவை அனைத்தையும் நான் இல்லாமல் செய்ததாகவும் கூறுகிறார்.

ஆனால் நாங்கள் வந்த பின்னர்தான் மலையக மக்களுக்கு தனிவீட்டுத்திட்டம், காணி உறுதிபத்திரம், அதிகாரசபை பிரதேச சபை அதிகரித்தல் என பலவற்றை பெற்று கொடுத்துள்ளோம்.

அந்தவகையில் இத்தகையவர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கி அவர்களை ஏமாற்றுவதற்கு முனைகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 5000 ரூபாவை கேட்டிருந்தேன். அதற்கு ஆதரவு வழங்குவதாக கூறிவிட்டு தேர்தல் ஆணையாளரிடம் சென்று முறைபாடு ஒன்றினை செய்து அதனை இல்லாமல் செய்துவிட்டார்கள்.

எனவே சஜித் பிரேமேதாஸ வெற்றி பெற்றால் மாத்திரமே எமது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படும் – என்றார். (ஐ)

## துப்பாக்கியுடன் ஒருவர் குருநாகலில் கைதானார்


கொழும்பு, ஒக். 21

குருநாகல் -வாரியபொல பகுதியில் சட்டவிரோதத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாரியபொல-பெலிகஹவத்த பகுதியில் சட்டத்தை நிலைநாட்டும் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போதே இவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பெலிகஹவத்த பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து குழல் 12 ரக துப்பாக்கியொன்று மீட்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைபொலிஸார்முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## 40 தங்க பிஸ்கட்டுக்களுடன் விமான நிலைய ஊழியர் கைது



கொழும்பு, ஒக். 21

சுமார் மூன்றரை கோடி பெறுமதியான 40 தங்க பிஸ்கட்களுடன் கட்டுநாயக்க விமான நிலையச் சுங்கத்தீர்வைக் கடையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் கைதாகியுள்ளார்.

விமான நிலையத்தில் தங்க பிஸ்கட்டுக்களைக் கடத்த முற்படும் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.10.2019 இல் வெளியிடப்பெற்றது.